# சிவசபரி யோகம்

குருசுவாமியின் 18ம் வருட பூர்த்தி சிறப்பு மலர்



ஸ்ரீ சபரி யாத்திரை குழு

ஸ்ரீ பச்சத்தண்ணி மாரியம்மன் ஆலயம்

இரகலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Wishes from*

# JOJO'S HOLDING'S (PVT) LTD.,

Photocopy, fax, Lamination, Binding, Printouts
E-Mail, Scanning, CD/DVD Writing. Mobile Phones
Memory Cards, Phones accessories, Computer Accessories
All Network Sim Cards, Phone Cards & Reloads.




**No. 50, New Bazaar Street,
Nuwara Eliya.**

**No. 52, Bus Stand Complex,
Nuwara Eliya.**

Telefax : 052-2222745
052-2222571
Direct : 052-2223842

Mobile: 077-3123633
072-2444333
078-5005003
075-5894894

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ பச்சதண்ணி மாரியம்மன்


## Our Services

- Motor Vehicle Direct Importer (Japan, Thailand, UK etc)
- Authorized Dealer for Hutchison Telecom (Nuwara Eliya District)
- Authorized agent for Western Union
- Jojos Tea ( Island wide Distributions & Exports)
- Jojos Communication
- City Communication
- Mobile One Distribu

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முன்னுரை

## சுவாமியே சரணம் ஐயப்பா

இக்கலியுகத்தின் மனிதனை தெய்வமாக்குகின்ற சபரி மலை சாஸ்தா ஐயப்ப சுவாமியின் மகர ஜோதி மண்டல விரதத்தினை அனுஸ்டிக்கின்ற திருவருளையும், திருவாய்ப்பினையும் 1996ம் ஆண்டு முதல் தந்தருளிய எம்பெருமான் சபரி கிரீச நாதன் ஐயப்பனுடைய திருப்பாத கமலங்களை சிரம் தாழ்த்தி வணங்கிக் கொண்டு இம்முன்னுரையை எழுதுகிறேன்.

இயற்கை அழகும் வளமும் நிறைந்த கேரளத்தில் பக்தர்கள் மிக அதிக அளவில் சென்று வழிபடுவது சபரிமலையில் அமைந்துள்ள ஐயப்பன் திருத்தலமாகும். சாஸ்தா கோவில்களில் சபரிமலை கோவிலே மிகவும் பிரசித்தி பெற்ற தலமாகும். கேரளத்தை தோற்றுவித்த பரசுராமரே ஐயப்பன் கோவிலையும் ஸ்தாபித்தார் என்று கூறப்படுகிறது. அச்சங்கோவில், ஆரியங்காவு, குளத்துப்புழை, எருமேலி தர்ம சாஸ்தா கோவில், பந்தளம் வலியக்கோவில் ஆகியவையும் பரசுராமரால் ஸ்தாபிக்கப்பட்டவை. இவை பஞ்ச சாஸ்தா கோவில்கள் என்றழைக்கப்படும். இந்த கோவில்களில் ஐயப்பன் குழந்தையாக, பாலகனாக, கிரகஸ்தனாக பல்வேறு உருவங்களில் காட்சியளிக்கிறார்.

இந்த வகையில் இனம், மத, மொழி, ஜாதி வேறுபாட்டினை மறந்து அணைவரும் ஒன்றாக கூடி வழிபடுகின்ற ஐயப்பனின் சபரிமலை யாத்திரை 5 சுவாமி மார்களை கொண்டு ஆரம்பித்த குழு இன்று 127 சுவாமி மார்களை தாண்டியுள்ளது.

இந்நூலில் பஞ்ச சாஸ்தா ஆலயங்களின் சிறு விளக்கங்களும், எல்லம் வல்ல ஹரிஹரசுதன் ஐயப்பனின் வரலாறுகளும், எமது இந்து மதத்தின் சில முக்கிய விளக்கங்களும், மற்றும் ஆனந்தமிகு பஜனைப் பிரியனின் சில பக்தி பாமாலைகளை பிற நூல்களில் இருந்து தொகுத்தும் இந்நூலினை தயாரித்துள்ளேன். அத்துடன் மணிகண்டனுடைய மண்டல விரதித்தினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுஸ்டிக்கின்ற ஐயப்ப சுவாமிமார்களும், வழிபடுகின்ற ஐயப்ப அடியார்களும் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் பற்றியும் சுருக்கமாக என்சிந்தனைக்கு எட்டிய வகையில் எழுதியுள்ளேன்.

இதன் மூலம் ஐயப்ப விரதத்தினை அனுஸடிக்கின்ற அடியார்கள் தவறுகளின்றி இவ்விரதத்தினை முறையாக அனுஸ்டித்து, எங்கள் குழ தெய்வமாகிய சபரிகிரி வாசனின் பூஜைகளில் பங்கு கொள்வதற்கும் இந்நூல் பெரிதும் பயனுடையதாக அமையும் என கருதுகின்றேன்.

சிறியேனாகிய என்னால் வெளியிடப்படுகின்ற சிவசபரியோகம் எனும் வெளியீட்டிலே ஏதாவது தவறுகள், பிழைகள், குற்றங்கள் இருப்பின் அதனை மன்னித்து அருள வேண்டுமென அரிஹரசுதன், ஆனந்த சித்தன் ஐயன் ஐயப்ப சுவாமியை பிரார்தித்து ஐயப்ப குருசுவாமிமார்கள், ஐயப்ப சுவாமிமார்கள், ஐயப்ப அடியார்கள் அனைவருமே பொருத்தருள வேண்டுமென வேண்டுகின்றேன்.

இத்தகைய என் ஆக்கத்திற்கு உறுதுணையாக நின்ற சுவாமி மார்களுக்கும், விளம்பரங்களை வழங்கிய விளம்பர தாரர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இப்பணி வருடந்தோரும் தொடருவதற்கு எல்லாம் வல்ல சபரிமலை ஐயப்பனுடைய திருவருள் கிடைக்க வேண்டுமென்று பிரார்த்தித்துக் கொள்கின்றேன்.

நன்றி
“சாமியே சரணம் ஐயப்பா”
சிவஸ்ரீ ந.சிவராஜா குருக்கள் (குருசாமி)
ஸ்ரீசபரி யாத்திரை குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## எனது குருநாதரின் ஆசியுரை
## ஸ்வாமிசரணம்

சரணம் சொன்னால் மரணம் இல்லை கலியுகத்தில் கண்கண்ட தெய்வம் ஸ்வாமி ஐப்பன் ஜாதி மதம் இனம் என பல நாடுகள் கடந்து வருடம் தோறும் பல்லாயிரங்கணக்கான பக்தர்கள் ஐயனைக் காண வருகிறார்கள் அவ்வாறு வருபவர்களின் குறைகலையல்லாம் தீர்த்துவைப்பார் அந்த பதினெட்டுபடி நாயகன் அவ்வழியில் குருவருள் பெற்ற திரு சர்மாஸ்வாமி (சிவராஜா குருசாமி) அவர்கள் தற்பொழுது பதினெட்டாம் ஆண்டு சபரிமரை அடையவுள்ளார் அவருக்கு ஐயப்பன் பதினெட்டு வளங்கலை நல்கி ஸ்ரீ லங்காவிலிருந்து மேலும் பலநூறுஸ்வாமிகளுக்கு ஐயனை பற்றிய வழிமுறைகளை நல்கி சபரிமலைக்கு அழைத்து வரவேண்டும் என என் ஐயனை வேண்டிக்கொள்கிறேன. சர்மாவின் முதல் சபரியாத்திரைக்கு அடியன் இருமுடி கட்டியது எனக்கு ஐயன் இட்ட ஆணை அவர்கள் முதலில் ஸ்ரீ லங்காவிலிருந்து புறப்பட்டு திருச்சி வந்தவுடன் தனது நண்பரிடம் இருமுடி கட்டி வழியனுப்ப குருஸ்வாமி வேண்டும் என்று சொல்ல அவர் என் பெயரை சொல்லியிருக்கிறார் ஆனால் அந்து நண்பரை நான் பார்த்தது கிடையாது இவர்கள் என் முகவரிக்கு வந்து விபரங்களை சொன்னார் ஒரு கணம் கண்முடி ஐயனை தெழுதேன் ஐயப்பன் இட்டகட்டளை என்று இருமுடி கட்டி வழியனுப்பி வைத்தேன் அதனை இன்றளவும் நினைத்து மகிழ்கிறேன் முதலில ஐந்துபேர்களுடன் யாத்திரை தொடங்கிய சர்மா அன்று பல நூறு ஸ்வாமிகளுக்கு குருவாகவும் வழிகாட்டியாகவும் இருப்பது மிகவும் மகிழ்ச்சியாகவுள்ளது அவர் சபரிமலையில் ஐயப்ப சேவா சங்கத்துடன் செய்யும் அன்னதான பணி மிகவும் சிறப்புடையது. இது மேலும் தன்னுடன் வரும் ஸ்வாமிகளுடன் சேர்ந்து செய்யவேண்டும் சுவாமிக்கு ஒரு பணிவான வேண்டுகோள் ஸ்ரீலங்காவில் சேவா சங்க கிளையினை தங்களது தலைமையில் தொடங்க வேண்டிகொள்கிறேன. சர்வாசுவாமிக்கு என் சார்பாகவும் எங்கள் குடும்ப சார்பாகவும் ஐயப்பன் பரிபூர்ண வாழ்வும் வளமும் அருளவேண்டும் வேலும் பல பதினெட்டு படிகள் கடக்க ஐயப்பனை தியானிக்கிறேன்

ஆசீர்வதாங்களுடன்

எஸ்.ஆர். கிருஸ்ணன் சுவாமிகள்
இணை செயலாளர்.
அகில பாரத ஐயப்ப சேவா சங்கம்
திருச்சி, தமிழ்நாடு,
இந்தியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ பச்சதண்ணிமாரி அம்மன் ஆலய வரலாறு

ஏறத்தால 220 வருடங்களுக்கு முன்பு பச்சதண்ணீரில் விளக்கு எரிந்த காரணத்தால் ஸ்ரீ பச்சதண்ணி மாரி அம்மன் என பெயர் பெற்றது இவ் ஆலயம். நுவரெலிய மாவட்டம் வலப்பனை பிரதேசம் இராகலை எனும் புனித பதியில் அம்பாள் வீட்டிருந்து துதிப்போர்க்கு இடர் களைந்து வருகின்றாள் ஸ்ரீ பச்சதண்ணி மாரி அம்மன்.

இவ் ஆலயத்தில் இந்து, பௌத்தம், முஸ்லிம், கிறிஸ்தவர் என இன மத பேதமின்றி மக்கள் வழிபடும் புனித தலமாகும். இவ் ஆலயத்திலே மாதாந்தம் பௌர்ணமி மஹா சக்தி யாக பூஜைகளும் வருடந்தோரும் ஆடி மாத உற்சவமும் கார்த்திகை மாதத்தில் சபரிமலை ஸ்ரீ ஐயப்பன் பூஜையும் விசேடமாக நடந்து வருவது குறிப்பிடத்தக்கது.

இவ் ஆலயத்தை ஆரம்ப காலத்தில் இருந்து தோட்ட நிர்வாகம் பராமரித்த வந்தது தற்பொழுது திருவாளர் T. கருப்பையா தலைவர் அவர்கள் பொறுப்பேற்று பாலஸ்தாபனம் செய்யப்பட்டு நவக்கிரகம், ஆஞ்சநேயர் போன்ற ஆலயங்களும் அமைக்கப்பட்டு ஆலயத்தை சீர்திருத்தி 2010ம் ஆண்டு 05ம் மாதம் 19ம் திகதி சிவ ஸ்ரீ. ந. சிவராஜா குருக்கள் (குருசுவாமி) அவர்களின் தலைமையில் பிரதி'டா பிரதம குரு சிவாச்சார்ய திலகம் கிரியா சாகரம் பிரம்ம ஸ்ரீ சி.கு. கணேசமூர்த்தீஸவர குருக்கள் அவர்களால் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. ஆதணை தொடர்ந்து ஒவ்வொரு நாளும் 3 கால பூஜைகளும் ஆலய நிர்வாக சபையினரது உதவியோடும் ஆலய பிரதம குரு சிவ ஸ்ரீ. ந. சிவராஜா குருக்கள் உதவி குரு யோகசெல்வம் சர்மா இருவராலும் பூஜைகள் செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவாச்சார்ய திலகம். அகோர சிவாச்சாரியார்,
சாகித்யசாகரன்

**பாரத்வாஜி பிரம்ம ஸ்ரீ சி.கு. கணேசமூர்த்தீஸ்வர குருக்கள்**
அகில இலங்கை இந்து மதகுரு ( )
ஸ்ரீ வீரசக்தி விநாயகர் தேவஸ்தானம்
பண்டாரவளை வீதி - ஹாலி எல

## வாழ்த்துச் செய்தி

நவீன வாழ்வாதார முறையினை முன்னிட்டுச் செல்லும் எமது சமுதாயத்தில் மனோ ரீதியில் இறைவனை உணர்தல் என்பது சாத்தியமற்ற ஒரு விடயமாக மாறிவிட்டது. இச்சூழ்நிலையில் வருடம் முழுவதும் இறைவனுக்காக என்னை அர்பணிக்க முடியா விடினும் "தத்வமசி" என்ற வார்ததைக் கேற்ப பஞ்சகிரிவாசன் தர்மசாஸ்தா வழி நின்று மண்டல விரதமிருந்து ஐயனின் பாதம் சேர்தல் சிறப்பு மிக்க ஒரு வழிபாடாக திகழ்கிறது இச்சபரிமலை பயணத்திற்கு சுவாமிமார்களை வழிநடத்திச் செல்பவரே சற்குரு எனப்படுவார். அவ்வாறாக இலங்கையில் மத்திய மாகாணத்தில் ராகலை நகரிலே ஸ்ரீ சபரி யாத்திரைக்குழு எனும் சிறப்பான அமைப்பில் சமயத்தையும் நல்லொழுக்கத்தினையும் எடுத்துரைத்து ஐயப்பன் அடியவரகளை அறநெறிப்படுத்துபவர்தான் சிவ ஸ்ரீ. ந.சிவராஜா குருசுவாமி அவர்கள்.

"குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கண மேயுங்காத்தல அரிது"

எனும் குறலிற்கேற்ப அன்பாகவும், இனிமையாகவும், பண்பாகவும் பேசும் பழக்கமுடைய இவர் யாரேனும் அடியவர்கள் குற்றமிளைப்பின் அவர் முன்பே மிகக் கண்டிப்புடனும் செயல்படுவார் காரணம் அவரின் தவறினை எதுவித தயக்கமும் இன்றி எடுத்துரைப்பார்.
இவரின் 18வது மாமலை சபரியாத்திரை இனிதாய் நிறைவுறவும் நீண்ட ஆயுளுடனிருந்து வரும் காலங்களிலும் எமது சமூகத்தில் நற்பணி செய்யவும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



052-2265333

# සුභාශිංසනය

නුවරඑළිය දිස්ත්‍රික්කයේ රාගල නගරාසන්නයේ පිහිටා ඇති පච්චතන්නි මාරියම්මන් දේවාලයේ ප්‍රධාන පූජ්‍ය තුමා වන එන්. සිවරාජා කුරුක්කල් තුමා ඉන්දියාවේ කේරල ප්‍රාන්තයේ සබරිමලේ අයියප්පන් වේනාලය වැඳ පුදා ගැනීම සඳහා බැතිමතුන් වාර්ෂිකව වන්දනා චාරිකාවේ ගෙනයන අතර එහි දහඅටවන (18) වතාව හිමිති කරගෙන නිකුත්වන මෙම පුස්තකය වෙනුවෙන් ආශීර්වාදත්මක ප්‍රකාශයක් කිරීමට ලැබීම පිලිබඳව බෞද්ධ භික්ෂුන් වහන්සේ කෙනෙක් ලෙස මම අතිශයින් සතුටුවෙමි.

එන්. සිවරාජා කුරුක්කල් තුමා මා දිගුකාලයක සිට හැඳිනීමන් ඇති හින්දු සහ බෞද්ධ බැත්මතුන්ගේ හදවත් දිනා ගනිමින් ආගමික භක්තිය වැඩි දියුණු කිරීමට සමත් ප්‍රදේශයේ ජිවත්වන හින්දු පූජ්‍ය තුමෙකි. ප්‍රදේශයේ සාමසිත සමගිදිසාව වෙනුවෙන් අනෙකුත් ආගමික නායකයන් සමග සුහදව සහෝදරත්වයෙන් බොහෝ ආගමික හා ජාතික කටයුතු වල යෙදෙන මෙතුමා කරන මෙම උතුම් ආගමික කාර්යය දිග කලක් සිදු කිරීමට නිරෝගි සුවය ගතන අතර සියළු දෙවියන්ගේ දේවාශිර්වාදයද ලැබේවායි පතමි.

පිටිගල වජිර ස්ථවිර
ශ්‍රී ශාරිපුත්‍රාරාමස්ථ රේවත පිරිවේන
රාගල - හල්ගුන්ඔය.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# පොලිස් ස්ථානය - රාගල
# பொலிஸ் நிலையம் – இராகலை
# Police Station - Ragala



එච්. ඩී. ටී. යූ. ජයසේකර
පොලිස් පරීක්ෂක
පොලිස් ස්ථානාධිපති
රාගල,

රාගල ශ්‍රී පච්චත්තන්නි මාරිඅම්මන් දේවස්ථානයේ කුරුක්කල් නඩරාජා ශිවරාජා ගුරු ස්වාමි විසින් 18 වන වරටත් ඉන්දියාවේ කේරල ප්‍රාන්තයේ පහිටුවා ඇති ශ්‍රී සබරිමලෙයි අයියප්පන් ස්වාමි දේවස්ථාන උත්සවය සඳහා පිටව යන බව දැන ගැනීම සතුටට කරුණකි.

මෙහි ඇති සුවිශේෂි වැදගත්කම වන්නේ මෙම වන්දනාමාන චාරිකාව සඳහා සින්දු මැතිමතුන් පමණක් නොව බෞද්ධ බැතිමතුන් මෙම කුරුක්කල් ස්වාමි විසින් සහභාගි කරවා ගැනීමයි.

2015-01-08 වන දින පිටව යන මෙම වන්දනාමාන චාරිකාව මාසයක පමණ කාලයක් උපවාස කර පිටවී යාමට නියමිතව ඇත.

ඉන්දියාවේ කේරල ප්‍රාන්තයේ පිහිටුවා ඇති ශ්‍රී සබරිමලෙයි අයියප්පන් ස්වාමි දේවස්ථාන උත්සවය සඳහා සහභාගි වීමට පිටව යන ශ්‍රී පච්චත්තන්නි මාරිඅම්මන් දේවස්ථානයේ ගුරුක්කල් නඩරාජා ශිවරාජා ගුරු ස්වාමිට හා අනෙකුත් සියලු ආගමික බැතිමතුන් හට දේව ආශිර්වාදය ලැබේවායි මා ප්‍රාර්තනා නරමි.

එච්. ඩී. ටී. යූ. ජයසේකර
පොලිස් පරීක්ෂක
පොලිස් ස්ථානාධිපති
පොලිස් ස්ථානය
රාගල

දුරකථන : 052-2265222 / 052-2265788
ෆැක්ස් : 052-2265222
ඊ-මේල් : ragala@police.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ ஐயப்ப சுவாமியே துணை

அணிந்துரை

இராகலை 1ம் பிரிவில் அமைந்துள்ள ஸ்ரீ பச்சதண்ணி மாரி அம்மன் கோவில் வரலாற்று சிறப்பு மிக்க தலம். இத்திருத்தலத்தில் எக்கால கட்டத்திலும் ஸ்ரீ ஐயப்பன் பஜனை நிறைவேற்றப்படவில்லை. இந்நிகழ்வுக்கு உரம்மூட்டி வளர்த்த பெருமை சிவ ஸ்ரீ ந.சிவராஜா குருக்களையே சாரும். புகழ்ச்சியுள்ள. 18வருட காலம் வளர்த்தெடுத்த பெருமை இவரையே சாரும். ஆகவே இக்கால நிகழ்வுகளை இனிதே நிறைவேற்றிய வரலாறு படைத்த புத்தக வெளியீட்டிற்கு எனது வாழ்த்துக்கள். இவ்வமைப்பில் ஸ்ரீ ஐயப்பனின் சிறப்பு வழிபாட்டு முறை இன,சன ஒற்றுமை இம்மை, மறுமை வாழ்வியல் தத்துவம் உள்ளடக்கமாக அமைந்துள்ளது.
ஸ்ரீ சபரி யாத்திரை குழு வளர்ச்சி இப்பதினெட்டு வருட காலத்தில் ஆகம விருட்சம் போல் வளர்ந்து விழுதுகள் தாங்கி நிற்கின்றது வெள்ளிடை மலை.

இவரது சமய சேவை தொடர ஸ்ரீ ஐயப்ப சுவாமி சக்தியையும், தைரியத்தையும் கொடுத்து மேலும் பல பக்தர்களை தோற்றுவிக்கும் என்பது உண்மை.

பணி தொடர பலம் பெறுவோம். ஸ்ரீ ஐயப்பன் துணை

இங்ஙனம்
ப.வைத்திலிங்கம் (சமாதான நீதவான்)
திருமண பதிவாளர்
முன்னால் அதிபர்

P.VYTHILINGAM J.P.
Justice of Peace
Ex. Principal.
Ex.Coroner.
Ex.C.M.(Ministry of C. Affairs)
Ex.Chairman M.P.C.S. Ragala.
Birth, Death & Marriage Registrar Walapane
44/25, Horsthpura, Ragala.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**MATURATA**
**PLANTATION LIMITED**

E-mail : ragalla@freelanka.com
Telephone : 052--7892033/ 2265279

Ragalla Estate,
Halgranoya.

Fax: +94-052-2265297
Factory : 052-7892034



To Whom it may Concern

Hereby I take this opportunity to convey my sincere appreciation to Rev. S. Sivaraj Kurukkel - Chief Priest of Sri Patchathanni Mariyamman Temple, which is situated Nuwara Eliya, District Ragalla Group for the 18th Successful tour ti obtain blessing of Sabarimalai Iyappan Temple in Keralla, India,

I wish him all success for the Tour

MATURATA
HEARTLAND OF CEYLON TEA
RAGALLA GROUP

GROUP MANAGER

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## குருசாமி ரவிசாமி அவர்களின் ஆசியுரை

ஸ்ரீ சபரிமலையிலிருந்து இவ்வுலகை பரிபாலித்து வரும் 18 படிகளுக்கு அதிபதியும் தெய்வ அபிஷேக பிரியனுமாகிய ஸ்ரீ ஹரி ஹர சுதனை வணங்க அருள்பாலித்துள்ளர். விரதமிருந்து ஸ்ரீ ஐயப்பனை வணங்குவது இந்து மதத்தையே வணங்கியதாகும் அதுபோல சாதி மதங்களுக்கு அப்பாற்பட்டவன் வீரமணிகண்டன் பரிசுத்த பிரம்மச்சாரியாக அவனை மனதார நினைத்து அவன் பாதங்களை வணங்கி எந்த வேலையை செய்தாலும் கார்ய சித்தியடைவது உருதியே பிரம்மாச்சாரியானதால் மனக்கட்டுப்பாடு வந்து சகோதரத்துவம் பெருகி அன்பினால் இவ் உலகிலும் ஐயன் அருளால் மேலுலகிலும் நாம் பெருமைகள் பெற்று வளத்துடன் வாழ நமக்கு கிடைத்த வரப்பிரசாதம் ஸ்ரீ ஐயப்பன் வழிபாடு (இதில் இன்னும் முக்கிய காரியம் ஒன்று கூறப்பட்டுள்ளது) குருபக்தி நமது பூஜை முறைகளிலேயே மகிச் சிறந்தது குருவின் பக்தியைபெற்று அவர்மூலம் பக்தியை குருசிஷ்ய முறை இது ஐய்பப வழிபாட்டிலே தெளிவாக கூறப்பட்டுள்ளது. சிறந்த குருவின் மூலம் வழிபாடு நடத்தி புனித யாத்திரையாக செவ்வனே செய்வித்து எங்களுக்கும் எங்கள் வழித்தோன்றல்களுக்கும் ஒரு சிறந்த உயர்ந்த வழிப்பாட்டுமுறையைக் காட்டி அவன் அருள் பெறவும் பக்தியிக் உணர்வினால் இராகலை வாழ் மக்களுக்கு கிடைத்த குருவாக சிவஸ்ரீ ந. சிவராஜ குருக்கள் (குருசாமி ) இவ் வருடம் பதினெட்டம் மலை செல்வதையுற்று பெருமகிழ்வு அடைகிறேன். ராவண பூமியில் எழுந்தருளியிருக்க கூடிய ஸ்ரீ பச்சதண்ணி மாரியம்மன் ஆலயத்தில் பல்லாண்டு காலம் பூஜைகளை நடாத்தி வரும் குருவாக திகழ்கின்ற சுவாமியின் தொண்டு இன்று நூற்றுக்கும் மேற்பட்ட சுவாமிமார்களை சபரிமலை அழைத்து செல்லும் பாக்கியம் பெற்றதுமல்லாது ஆயிரங்கணக்கான அடியார்களையும் மனதில் இடம்பிடித்து அம்மக்களின் குறைகளை நிவர்த்தி செய்து கொண்டிருக்கும் அப்பாளின் அருளையும் பெற்று 18ம் படி ஏறக்கூடிய குருசுவாமிக்கு எனது ஆசீகளுடன் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்பாளின் ஆசியும் சபரிமலை ஸ்ரீ ஐயப்ப சுவாமியின் திருவருளையும் பூரணமாக பெற்று மெம்மேலும் பல தொண்டுகளை செய்துது வாழ்வில் சகல சௌபாக்கியமும் பெற்று வாழ வாழ்த்துகின்றேன்.

சு.ரவீந்திரகுமார்
(ரவிசாமி)
ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்பாள் ஐயப்ப தேவஸ்தானம்
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**இரா. செந்தமிழ் செல்வன் குருசுவாமியன்**
**ஆசீயுரை**

ஆதி ஸ்ரீ ஐயப்பன் ஷேத்திரம்
அகில இலங்கை ஐயப்ப சேவா சங்கம்
குரு சுவாமியின் ஆசியுரை

இராகலை ஸ்ரீ பச்சத்தண்ணி மாரியம்மன் ஆலய குருக்களும் ஸ்ரீ சபரியாத்திரை குழு குரு சுவாமி சிவ ந. சிவராஜா குருக்கள் இவ்வருடம் 18ம் வருடாமாக சபரிமலை சத்தயமான பென் பதினெட்டாம் படி ஏறும் சிறப்பினையொட்டி சிவ சபரியோகம் எனும் மலர் வெளியீடு என்பன நடைபெறுவதையிட்டு மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம்.

இராகலை போன்ற பகுதியில் மிகுந்த போராட்டங்களுக்கும் பொருளாதார நெருக்கடிக்கும் மத்தியில் விடாபிடியாக நின்று தனது கடும் முயற்சியினால் பல நல்ல உள்ளங்களின் உதவியோடு அப்பகுதியில் ஐயப்ப வழிப்பாட்டினை மிக சிறப்பாக செய்து வரும் சிவராஜா குருசுவாமி பாராட்டத்தக்க பாக்கியம்பெற்றவர்.

தொடரந்து 18 வருடங்காளாக சபரிமலைக்கு ஐயப்பதரிசனம் காண தன்னை முழுமையாக ஒப்படைத்தார், சிவராஜா குருசுவாமி ஐயப்பனுடைய திருவட்கடாட்சம் என்றும் கிடைக்க எல்லாம்வல்ல ஆதி ஸ்ரீ ஐயப்ப சுவாமயின் அருள் கிடைக்க பிராத்திக்கின்றோம்.

இரா. செந்தமிழ்செல்வன் (சமாதானநீதவான்)
ஆதிஸ்ரீ ஐயப்ப ஷேத்திரம் குருசுவாமி
அகில இலங்கை ஐயப்ப சேவா சங்கம்
தலைவர் - அரங்காவலர்
இல.69, எ.ஜி. ஹன்னிஹப்புஹாமி மாவத்தை
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மீக வாழ்துரை

சபரிமலை வாழ் தேவா சரணம் நின்
தாள் பணிந்தோம், காத்தருள்வாய் ஐயனே சரணம்
பதினெட்டுப் படி மீதமர்ந்து தரிசனம் தரும் ஐயனே
அகிலாண்ட கோடி நாயகனே அருள் புரிவாய் ஐயப்பன்

சபரிமலை! இக் கலியுலகத்தருள் தெய்விகமானதோர் மலை உலகிற்கு சரணா கருத் தத்துவத்தை உணர்ந்து நமக்கெல்லாம் கிடைத்த ஒர் அற்புதமான திவ்ய தேசம் அதிலும் சபரி மலையில் ஐயன் வீற்றிருக்கும் சன்னிதானத்தை அடைய நாமெல்லோரும் இருமுடி சுமந்து அந்த சத்யமான 18 படிகளைக் கடந்தே தான் அவன் தரிசனம் காணமுடியும். இந்த படிகளை 18 தத்துவங்கான முடியும். இந்த படிகளை 18 தத்துவங்களாகவும் மற்றும் 18 புராணங்களைக் குறிப்பதாகவும் கூறுவோர் உண்டு.

கலியுகத்தெய்வம் கருணாமூர்தியாக சபரிமலையில் அமர்ந்துள்ள ஐயப்ப பெருமானின் சந்நிதானதிற்கு வருடா வருடம் பல நாடுகளில் இருந்தும் கார்த்திகை மாதம் பிறந்து விட்டால் கோடிக்கணக்கான ஐயப்ப பக்தர்கள் கூடுகின்றனர் இந்த வகையில் ராகலை பச்சமாரியம்மன் கோவில் பிரதமகுரு சிவஸ்ரீ ந.சிவராஜக்குருக்கள் 18 தடவைகள் மாலை அணிந்து சபரிமலை சென்று வருகின்றார். 18 என்பது மலைகளை குறிப்பது போல குருக்கள் அவர்களும் குருசுவாமியாக விளங்கி 18வது தடவை மாலை இந்த நல்ல சந்தர்ப்பம் கூடியிருக்கின்றது.

இம்முறையும் கருணைநாதனின் பெருமைகளையும் புனித படிப்பூஜையின் சிறப்புக்கள் ஐயப்பனின் அருள் பெரும் பாடல்கள் ஐயனைப்பற்றிய பெரியோர்களிகன் தத்துவ முத்துக்களை மகர ஜோதி படிப்பூஜை சிறப்பு தரிசன மலர் சிறப்பு மலர் மண்ட பூஜை காலத்தில் வெளியிட இருப்பதையிட்டு பெருமிதம் கொள்கிறோம் குருசுவாமியி பணி உயர வாழ்த்துகிறோம் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

திரு.எஸ் சிவராஜா அவர்கள்
பிரபல தொழிலதிபர்
சிவா ரேடிக் கம்பணி
இல. 89, ஆட்டுப்பட்டித்தெரு.
கொழும்பு. 13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்

## தேவாரம்
## (திருச்சிற்றம்பலம்)

எண்ணுகே னெக்சொல்லி யெண்ணு கேனோ
எம்பெருமான் றிவருடியே யெண்ணி னல்லால்
கண்ணில்லேன் மற்றோர் களைகண் ணில்லேன்
கழலடியே கைதொழுது காணி ன்னால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைப்க்கும்போதுணரமாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புக்லூர் மேவிய புண்ணியனே.

## திருவாசகம்

மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்
துன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி
சயசய போற்றியென்னும்
கைதான் நெகிழ விடேனுடை
யாயென்னைக் கண்டுகொள்ளே.

## திருவிசைப்பா

இடர்கெடுத் தென்னை யாண்டு கொண்டென்னுள்
இருட் பிழம்பற எறிந்தெழுந்த
சுடர் மணி விளக்கினுள்ளொளி விளங்குந்
தூயநற் சோதியுட் சோதீ
அடல்விடைப் பாகா அம்பலக் கூத்தா
அயனொடு மாலறியாமைப்
படரொளி பரப்பிப் பரந்து நின்றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ்சில தேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத்திரள் மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டெனும் பதங் கடந்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்
பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு
உண்டேல் உன்னை என்றும"
மறவாமை வேண்டும். இன்னும் வேண்டும்
நான் மகிழ்ந்து பாடி
அறவா! நீ ஆடும் போது உன் அடியின்
கீழ் இருக்க என்றார்

## திருப்புகழ்

கைத்தல நிறைகனி யப்பமொ டவல் பொரி
கப்பியகிமுக நடிபேணிக்
கற்றிடுமடியவர் புத்தியி லுறைபவர்
கற்பக மெனவினை கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடு மரன்மகன்
மற்பொருதிரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர் கொடு பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படுகிரிதனில்
முற்பட எழுதிய முதல் வோனே முப்புரமெரிசெய்த
அச்சிவனுறைரதம்
அச்சது பொடி செய்த அதிதீரா
அத்துயரதுகொடு சுப்பிரமணிபடும்
அப்புனமதனிடை யிபமாகி
அக்குற மகளுடனச் சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுவாமி ஐயப்பன்

பந்தள நாட்டை பாண்டிய மன்னனான ராஜசேகரன் ஆண்டு வந்தான் அவனுக்கு நீண்ட காலமாக குழந்தைகள் இல்லை. ஒரு வாரிசு வேண்டி அரசனும் ராணியும் சிவனை வழிபட்டு வந்தனர் மகிஷாசுரன் என்ற அரக்கன் கடும் தவம் புரிந்து சாகாவரம் பெற்றான் பெற்ற வரத்தை தவறாகப் பணன்படுத்தி தேவர்களைக் கொடுமைப்படுத்தி வந்தான் பிரம்மா. விஷ்ணு சிவன் ஆகியோர்களின் சக்தியில் அவதரித்த சண்டிகாதேவியினால் மகிஷாசுரக் கொல்லப்பட்டான். அவன் தங்கை மகிஷி தனது சகோதரன் அழிவதற்கு காரணமான தேவர்களைப் பழிவாங்குவதற்காக பிரம்மாவை நோக்கி கடும் தவம் புரிந்தாள்.

பிரம்மா அவள் முன் தோன்றியதும் மகிஷி சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் பிறந்த ஒருவரைத் தவிர வேறு யாராலும் தனக்கு அழிவு ஏற்படக்கூடாது என்று வேண்டினாள். பிரம்மா அவ்வாறே அருளினார் அதன் பின் மகிஷி தேவர்களை பலவாறு துன்புறுத்ததத் தொடங்கினாள். பாற்கடல் கடைந்த போது அதில் தோன்றிய அமுதத்தை அசுரர்கள் தங்களுக்கே எடுத்துக்கொண்டனர். விஷ்ணு மோகினி ரூப வடிவெடுத்து தந்திரமாக அவர்கிளிடமிருந்து அமிர்தத்தை மீட்டு தேவர்களுக்கு வனங்கினார். விஷ்னுவின் மோகினி ரூப அழகில் மெய்யமறந்து சிவன் அவளோடு இணைந்தபோது ஒரு தெய்வீகக் குழந்தை பிறந்தது. அதுவே தர்மசாஸ்தா.

அந்தக் குழந்தைக்கு சிவன் ஒரு இரத்தின மணிமாலையை அணிவித்தார். மிகிஷியை அழித்து தேவர்களைக் காப்பாற்றவும் வாரிசுக்காக ஏங்கிய ராஜசேகரனுக்கு அருள் பாலிக்கவும் சிவன் அக்குழந்தையை பூவுலகிற்கு கொண்டு வந்தார். மன்னன் ராஜசேகரன் வேட்டையாடக் காட்டுக்குச் சென்றபோது பம்பை நதிக்கரையில் அந்த தெய்வீகக் குழந்தையை கண்டு பெரு மகிழ்ச்சியுடன் அதை எடுத்துக் கொண்டான். மன்னனும் ராணியும் குழந்தைக்ககு மணிகண்டன் எனப் பெயரிட்டு அன்புடன் வளர்த்து வந்தனர். மணிகண்டன் குருகுலத்தில் சேர்ந்து சகல கலைகளையும் பயின்றான்.

மணிகண்டன் குருதட்சணையாக குருவின் மகனின் குறைகளைப் போக்கி அவனுக்குப் பார்வையும் பேசும் சக்தியையும் அளித்தான். சில வருடங்களுக்குப் பிறகு, ராணிக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. மணிகண்டன் மேல் அவருளுக்கிருந்த அன்பு மாறதொடங்கியது மணிகண்டனுக்கு 12 வயது ஆனவுடன் மன்னர் அவருக்கு மகுடம் சூட்ட விரும்பினான் ஆனால் மகாராணி மந்திரியின் தூண்டுதலால் தன் மகனையே அரசனாக்க வேண்டுமென்று விரும்பினால் மந்திரியின் திட்டப்படி ராணி தலைவலியால் அவதிப்படுவதாக நடித்தாள் அவர் அனுப்பிய மருத்துவர் புலிப்பால் ஒன்றினல் தான் இந்நோய் குணமாகும் என்று கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிகண்டன் தன் தாயின் நலம் காக்க மன்னனிடம் அனுமதி பெற்று காட்டிற்கு புறப்பட்டான். அங்கு தன்னுடன் போரிடவந்த மகிஷியைக் கொன்று தன் அவதார நோக்கத்தை நிறைவேற்றினான். மணிகண்டனால் வதம் செய்யப்பட்ட மகிஷி சாபம் நீங்கி தேவலோக மங்கையாக மாறி தன்னை மன்னித்தருளி மணந்து கொள்ளும்படி வேண்டினாள். மணிகண்டன் தான் அவதரித்ததன் நோக்கம் நிறைவேறிவிட்டபடியால் அவளை சபரிமலையில் மாளிகபுறத்தம்மனாகக் காத்திருக்கும்படியும், எந்த ஆண்டில் ஒரு கன்னி ஐயப்பன் கூட சபரிமலைக்கு வரவில்லையோ அப்போது அவளை மணந்து கொள்வதாகவும் கூறினான் நன்றிக்கடனாக இந்திரன் ஆண்புலியாகவும், தேவர்கள் பெண்புலிகளாகவும் வடிவெடுத்து வந்தனர். புலிமீது அமர்ந்து மணிகண்டன் வெற்றி வீரனாக வருவதைக் பார்த்து மன்னன் தனக்கும் தெரியாமல் நடந்த சூழ்ச்சிகளை அறிந்து அவனை வணங்கி மன்னிக்கும்படி வேண்டினான். மணிகண்டன் எல்லாம் தன் விருப்பபடியே நடந்துள்ளது. எனக்கூறி, தன் தம்பிக்கு மகுடம் சூட்டிவிட்டு விண்ணுலகம் செல்லப் புறப்பட்டான் மணிகண்டன் அவர்களோடு வாழ்ந்ததன் நினைவாக ஒரு கோவில் கட்ட மன்னன் விரும்பினான்

மணிகண்டனும் அவ்வாறே கோவில் கட்ட வேண்டிய இடத்தைக் காண்பிக்க ஓர் அம்பை எய்தினான் அது சபரிமலைக்கு விழுந்தது. மகரஜோதி நாளில் வானில் தான் ஒரு நட்சத்திரமாக தோன்றி காட்சியளிப்பதாக கூறி மறைந்தான். மன்னன் அம்பு விழுந்த இடத்தில் 18படி கொண்ட கோவிலை கட்டடினான் அம்மனுக்கும் தனியாக ஒரு கோயில் கட்டப்பட்டது.

ஆண்டுதோறும் நடைபெறும் மகர ஜோதியின் போது ஐயப்பனுக்கும் மாளிகப்புத்தம்மனுக்கும் அணிவிக்கும் திருவாபரணங்கள் பந்தளம் அரண்மனையிலிருந்து தலைமேல் சுமந்து கால்நடையாக சபரிமலை கோயிலுக்கு எடுத்துச் செல்லப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயப்ப விரதம் இருக்க வேண்டிய முறைகள்
**(அகத்திய மாமுனிவர் வகுத்துக் தந்த முறைகள்)**

01. சபரிமலை செல்பவர்ஒரு மண்டல காலம் (41 நாட்கள்) விரதம் இருக்க வேண்டும்

02. கருப்பு. நீலம், பச்சை காவி போன்றவற்றில் ஏதாவது ஒரு நிற வேஷ்டியையும் சட்டையையும் அணிய வேண்டும்.

03. கார்த்திகை முதல் நாள் பெற்றோர்களை வணங்கி அவர்களின் அனுமதி பெற்று குருசாமியின் கரங்காளல் மாலை அணிந்து கொள்ளவேண்டும் . பெற்றோர் மூலமும் மாலை அணிந்து கொள்ளலாம்.

04. அதிகாலை எழுந்து குளிந்த நீரில் நீராடி ஐயப்பனை 108 சரணம் கூறி பூஜை செய்ய வேண்டும் இதே போல சூரியன் மறைந்த பின்பு மாலையில் நீராடி 108 சரணம் கூறி ஐயப்பனுக்கு பூஜை செய்யவேண்டும். குளிப்பதற்கு சோப்பு உபயோகிக்கக் கூடாது.

05. இரவில் தூங்கும் போது தலையணை மெத்தை உபயோகிக்க் கூடாது பகலில் தூங்குவதைத் தவிர்க்க வேண்டும்

06. பிரம்மச்சரிய விரத்தை கண்டிப்பாக கடை பிடிக்க வேண்டும் இது மனோ வலிமையைப் பெருக்கி மனித வாழ்கையை உயர்துவதற்கு உதவுகிறது. மாதர்கள் யாவரையும் மாதாவாக காணவேண்டும் மாதவிலக்கு சமய மாதர்களுடன் பேசுவதோ பார்ப்பதோ கூடது.

07. சைவ உணவு மட்டும் உண்ணவேண்டும். மது அருந்தக்கூடாது பீடி, சிகரெட் பான்மசாலா போன்றவற்றை அறவே நீக்கிவிட வேண்டும்.

08. திரிகரண சுத்தி ( திரிகணரம் - மனம் வாக்கு. செயல்) ஆகியவற்றில் கவனமாக இருக்கவேண்டும். ஐயப்பனை எண்ணத்தில் எப்போழுதும் மனிசில் நினைத்து பக்திப்பூர்வமாக ஐயன் பாடல் ஒலித்து கொண்டிருந்தல் எண்ணங்கள் தூய்மையாக்கும் செய்யும் செயல்களும் பேசும் பேச்சுக்களும் நல்விதமாக அமையும்.

09. சண்டை சச்சரவுளில் கலந்து கொள்ளக்கூடது. எல்லோரிடமும் சாச்தமாக பழக வேண்டும்.

10. காமம். கோபம், கஞ்சத்தனம், மோகம் , அகம்பாவம் துவெஷம் முதலிய குணங்களைக்கு குறைப்பதற்கு அதற்கு உதவ எப்பொழுதும் ஐயப்பன் திருநாமத்தை உறுதுணையாக கொள்ளவேண்டும். பக்தனின் நெஞ்சினில் எப்பொழுதும் நிறைந்து நிற்பது ஐயப்பனிக் பேரொளி திருவுருவமேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. உரையாடும் போது சுவாமி சரணம் என்று சொல்லி துவங்குவதும், முடிக்கும் போதும் சுவாமி சரணம் என்று சொல்லி முடிப்பதும் நன்மைகளைத் தரும்

12. ஒரு ஐயப்ப பக்தரை வழியில் காண நேர்ந்தால் அவர் தெரியாதவராக இருந்தலும் சுவாமி சரணம் என வணங்க வேண்டும்.

13. மாலை அணிந்து காணப்படும் ஆண்களை ஐயப்பன் என்றும் பெண்பளை மாளிகைப்புறம் என்றும் சிறுவர்களை மணிகண்டன் என்றும் சிறுமிகளை கொச்சு சுவாமி என்றும் அழைக்க வேண்டும்.

14. குடை காலணிகளை சூதாடுதல் திரைப்படங்களுக்குச் செல்லுதல் தவிர்க்கப்பட வேண்டும்.

15. விரத காலங்களில் உணவின் அளவைக் குறைந்து உடலைக் குறைந்துக் குறைத்துக் கொள்ள வேண்டும். மார்கழி மாதத்தில் பதினைந்து தினங்களுக்காவது ஒரு வேளை உணவை விடுத்து இருக்க வேண்டும்

16. இலையில் சாப்பிடுவது நல்லது. உணவு உண்ண ஆரம்பிக்கும் பொழுது ஐயனை மனதில் நினைத்து சரணம் கூறி சாப்பிட ஆரம்பிக் வேண்டும்.

17. கன்னி சுவாமிகள் கன்னி பூஜை நடத்த வேண்டும் அல்லது ஒரு சுவாமிக்காவது அன்னதானம் செய்ய வேண்டும் விரத காலங்களில் இயன்ற வரை அன்னதானம் செய்ய வேண்டும்.

18. நமது நெருங்கிய ரத்தத் தொடர்பு உள்ள தாய், தந்தை சகோதரிகள் போன்றவர்கிளன் மணரம் ஏற்படுமாயின் மாலையைக் கழற்றி விட வேண்டும்

19. பெண்கள் ருதுமங்கல சடங்கிற்கோ, குழந்தை பிறந்த வீட்டிற்கோ சென்று கலந்துக்கொள்ளக் கூடாது.

20. விரத காலங்களில் தலைமுடி வெட்டிக்கொள்வதோ, செவிங் செய்துகொள்வதோ கூடாது.

21. மாலை அணிந்த எந்த ஐயப்பன் வீட்டிலும் உணவு அருந்தலாம் கடைகளில் சாப்பிடுவது தெருக்களில் விற்கும் பலகாரங்களை உண்பது கண்டிப்பாக கூடாது.

22. பக்தர்கள் நடத்தும் ஐயப்பன் பூஜை பஜனைகளில் கலந்து கொள்ள வேண்டும்

23. எல்லா மதத்தவர்களையும் மதித்து மத நல்லுணர்வை வளர்த்து அவர்களுடன் அன்புடன் பழக வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாலை அணிந்து கொள்ளும் போதுள்ள மந்திரம்

ஞான முத்ராம் சாஸ்த்ரு முத்ராம்
குரு முத்ராம் நமாம்யஹம்

வனமுத்ராம் நமாம்யஹம்
வனமுத்ராம் சுத்த முத்ராம் ருத்ர

முத்ராம் நமாம்யஹம்
சாந்த முத்ராம் சத்திய முத்ராம்

வ்ருத முத்ராம் நமாம்யஹம்
சபரியாஸ்ரம சத்யனே முத்ராம்

பாது ஸமாபிமே
குருதஷிணயா பூர்வம் தஸ்யாது

அநுக்ரஹ காரிணே
சரணாகதே முத்ராக்யாம் த்வன் முத்ராம்

பக்த முத்ராம் நமாம் யஹம்
சின்முத்ராம் கேசரிமுத்ராம் பத்ர முத்ராம் தராயம்யஷம்

சபரியாசல முத்ராயை நமஸ்துப்யம்
நமோ நம

தீபா நந்த்ரம் ஆசமநீயம் ஸமர்ப்பயாமி

இதைச் செல்லிச் சரணம் கூப்பிட்டுப் பின் மாலை அணிந்து கொள்ள வேண்டும்.

# மாலை கழற்றுவதற்கான மந்திரம்

அபூர்வ மசலா ரோஹி - திவ்யதர்சன காரண
ராஸ்த்ரு முத்ராத் யாஹாதேவ - தேஹோ மேவிரத மோசனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தத்வம் அஸி ( நீயே அந்த பேருண்மை)

சபரிமலையில் ஸ்ரீ ஐயப்பன் ஆலயத்தில் பதினெட்டு படி வழியாக ஏறிந் செல்லும் போது நம்மை முதலில் வரவேற்பது சமஸ்கிருதம், மலையாளம் ஆகிய மொழிகளில் பெரிதாக எழுதப்பட்டுள்ள "தத் த்வம் அஸி" என்கிற வாக்கியமாகும் நமது முன்னோர்களின் சாம அதர்வண வேதங்களின் தத்துவங்களின் சராமே தத்துமமஸி தான் இதன் பொருள் நீயே அந்த பேருண்மை அதாவது நீயே தத்துவாக இருக்கிறாய் என்பதாகும்.

மனிதன் வேதங்கள் நன்கு கற்று தேர்ந்து அதன் தத்துவங்களை உணர்ந்து கடைபிடிக்க ஆரம்பிக்கும் போது மனிதன் மனம் பூரணமத்துவ நிலை அடைந்த உயரந்த வாழ்க்கை தன்மை அடைந்துவிடுகிறது. மனித மனமே தெய்வம் குடி கொண்ட தெய்வ அருள் பெற்ற குணம் பெற்ற பெற்றதாகிவிடுகிறது. அந்த மனிதனே தெய்வநிலை அடைந்துவிடுகிறான்.

இத்தகைய உயர்ந்த தத்துவங்களால் தான் ஐயப்ப விரததத்துவம் வடிவமைக்கப்பட்டிகருக்கிறர். 18 வருஷம் தொடர்ந்து படியேறும் ஒருவன் தன்னை உயர்ந்த குணங்களால் உயர்த்திக்கொள்ள வேண்டும். இது தான் ஐயப்ப தத்துவம்.

### சபரிமலை தலைமை அர்ச்சகர் தந்திரி

சபரிமலையில் பாரம்பரியமாக பூஜை செய்ய உரிமை பெற்றவர்கள் தாழ மண்மடம் குடும்பத்தினர். உறவுமுறைக் குடும்பமான இவர்கள் செங்கனூரில் இருந்து 1மைல் வடக்கே மூன்று விடுகளில் அடுத்தடுத்து வசிக்கிறார்கள். பெரியவர பிரம்மஸ்ரீ கே. நீலகண்ட கண்டரு அவர் சகேதாரர் மகன் பிரம்பமஸ்ரீ திருமோகன் கணடரு மற்றொரு சகோதரர் மகன் பிரம்மஸ்ரீ ஸ்ரீராஜில் கண்டரு ஆகிய மூவம் ஒரு வருஷத்திற்கு ஒருவர் வீதம் மூன்று வருஷம் மாற்றி மாற்றி சபரிமலைக்கு தந்திரியாக இருப்பார்கள். அதன் பிறகு முதலாமவர் முதலஇவருஷம் இரண்டாமவர் இராண்டாவது வருஷம் இப்படி தலைமுறை தலைமுறையாக அவர்கள் குடும்பம் மட்டுமே தந்திரியாக இருக்க பரம்பரையாக உரிமை பெற்றவர்கள்.

படி பூஜை, கலச பூஜை லட்சார்சனை கணபதி ஹோமம், உதயாஸ்தமன பூஜை போான்ற யாவற்றையும் சபரிமலையில் தந்திரிதான் செய்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாலை அணிந்து கொள்ளும் போதுள்ள மந்திரம்

ஞான முத்ராம் சாஸ்த்ரு முத்ராம்
குரு முத்ராம் நமாம்யஹம்
வனமுத்ராம் நமாம்யஹம்
வனமுத்ராம் சுத்த முத்ராம் ருத்ர
முத்ராம் நமாம்யஹம்
சாந்த முத்ராம் சத்திய முத்ராம்
வ்ருத முத்ராம் நமாம்யஹம்
சபரியாஸ்ரம சத்யனே முத்ராம்
பாது ஸமாபிமே
குருதஷிணயா பூர்வம் தஸ்யாது
அநுக்ரஹ காரிணே
சரணாகதே முத்ராக்யாம் த்வன் முத்ராம்
பக்த முத்ராம் நமாம் யஹம்
சின்முத்ராம் கேசரிமுத்ராம் பத்ர முத்ராம் தராயம்யஷம்
சபரியாசல முத்ராயை நமஸ்துப்யம்
நமோ நம
தீபா நந்த்ரம் ஆசமநீயம் ஸமர்ப்பயாமி

இதைச் செல்லிச் சரணம் கூப்பிட்டுப் பின் மாலை அணிந்து கொள்ள வேண்டும்.

## மாலை கழற்றுவதற்கான மந்திரம்

அபூர்வ மசலா ரோஹி - திவ்யதர்சன காரண
ராஸ்த்ரு முத்ராத் யாஹாதேவ - தேஹோி மேவிரத மோசனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தத்வம் அஸி ( நீயே அந்த பேருண்மை)

சபரிமலையில் ஸ்ரீ ஐயப்பன் ஆலயத்தில் பதினெட்டு படி வழியாக ஏறிந் செல்லும் போது நம்மை முதலில் வரவேற்பது சமஸ்கிருதம், மலையாளம் ஆகிய மொழிகளில் பெரிதாக எழுதப்பட்டுள்ள "தத் த்வம் அஸி" என்கிற வாக்கியமாகும் நமது முன்னோர்களின் சாம அதர்வண வேதங்களின் தத்துவங்களின் சராமே தத்துமமஸி தான் இதன் பொருள் நீயே அந்த பேருண்மை அதாவது நீயே தத்துவாக இருக்கிறாய் என்பதாகும்.

மனிதன் வேதங்கள் நன்கு கற்று தேர்ந்து அதன் தத்துவங்களை உணர்ந்து கடைபிடிக்க ஆரம்பிக்கும் போது மனிதன் மனம் பூரணமத்துவ நிலை அடைந்த உயரந்த வாழ்க்கை தன்மை அடைந்துவிடுகிறது. மனித மனமே தெய்வம் குடி கொண்ட தெய்வ அருள் பெற்ற குணம் பெற்ற பெற்றதாகிவிடுகிறது. அந்த மனிதனே தெய்வநிலை அடைந்துவிடுகிறான்.

இத்தகைய உயர்ந்த தத்துவங்களால் தான் ஐயப்ப விரததத்துவம் வடிவமைக்கப்பட்டிகருக்கிறா். 18 வருஷம் தொடர்ந்து படியேறும் ஒருவன் தன்னை உயர்ந்த குணங்களால் உயர்த்திக்கொள்ள வேண்டும். இது தான் ஐயப்ப தத்துவம்.

### சபரிமலை தலைமை அர்ச்சகர் தந்திரி

சபரிமலையில் பாரம்பரியமாக பூஜை செய்ய உரிமை பெற்றவர்கள் தாழ மண்மடம் குடும்பத்தினர். உறவுமுறைக் குடும்பமான இவர்கள் செங்கனூரில் இருந்து 1மைல் வடக்கே மூன்று விடுகளில் அடுத்தடுத்து வசிக்கிறார்கள். பெரியவர பிரம்மஸ்ரீ கே. நீலகண்ட கண்டரு அவர் சகேதாரர் மகன் பிரம்பமஸ்ரீ திருமோகன் கணடரு மற்றொரு சகோதரர் மகன் பிரம்மஸ்ரீ ஸ்ரீராஜில் கண்டரு ஆகிய மூவம் ஒரு வருஷத்திற்கு ஒருவர் வீதம் மூன்று வருஷம் மாற்றி மாற்றி சபரிமலைக்கு தந்திரியாக இருப்பார்கள். அதன் பிறகு முதலாமவர் முதலஇவருஷம் இரண்டாமவர் இராண்டாவது வருஷம் இப்படி தலைமுறை தலைமுறையாக அவர்கள் குடும்பம் மட்டுமே தந்திரியாக இருக்க பரம்பரையாக உரிமை பெற்றவர்கள்.

படி பூஜை, கலச பூஜை லட்சார்சனை கணபதி ஹோமம், உதயாஸ்தமன பூஜை போன்ற யாவற்றையும் சபரிமலையில் தந்திரிதான் செய்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சபரிமலை புனித யாத்திரை

கேரளத்தில் பிரசித்திபெற்ற கோவில்களில் சபரிமலையும் ஒன்று. தென் மாநில மக்களின் கண்கண்ட தெய்வம் ஸ்ரீ ஐயப்பன். சபரிமலைக்கு புனித யாத்திரை செல்ல விரும்பும் பக்தர்கள் பலமுறை சென்று திரும்பிய ஒருவரை குருசுவாமியாக ஏற்று. அவர் கைகளினால் துளசிமணிமாலை அணிவிக்கப் பெற்றுத் தங்கள் நாற்பத்தொரு நாள் விரதத்தைத் துவங்குகின்றனர். தினமும் இருமுறை நீராடி, கருப்பு, நீலம் அல்லது காவி உடையணிந்து கோவிலுக்குச் சென்று வணங்கி ஒரு முறையே எளிய உணவருந்தி, தூய்மையான மனதுடன் விரதம் அனுஷ்டிக்கின்றனர்.

சபரிமலையின் புனிதம் கருதி பத்து வயது முதல் ஐம்பது வயது வரையுள்ள பெண்கள் அங்கு செல்வதில்லை. யாத்திரை புறப்படும் நாளன்று குருசுவாமியின் தலைமையில் சுவாமியைப் பூஜித்து நெய் அடைக்கப்பட்டு முத்துதிரையிடப்பட்ட தேங்காய் ஒன்றுடன் பூஜைப்பொருட்கள் அடங்கிய ஒரு முடியும், வழிப்பயணத்திற்கான உணவுப்பொருட்கள், நான்கு தேங்காய்கள் அடங்கிய மற்றொரு முடியும் ஆகிய இருமுடி கட்டினைத் தலையில் சுமந்துத சுமந்து சுவாமியே சரணம் ஐயப்பா என்ற சரண கோஷத்துடன் தங்கள் புனித யாத்திரையைத் துவங்குகிறாரகள்.

### பூஜை நாட்கள்

சபரிமலை கோவில் ஒவ்வொரு தமிழ் மாதம் மதுல் 5 நாட்கள் திறந்திருக்கும். இது தவிர மண்டல பூஜை நாட்கள் (நவம்பர் 16 முதல் டிசம்பர் 26) மகர சங்காராந்தி (ஜனவரி 14) ஐயப்பனின் பிறந்த நட்சத்திரமான பங்குனி உத்திரம் (ஆராட்டு) (பிப்ரவரி/மாாச்) மற்றும் விஷு (ஏப்ரல் 14) அன்றும் பக்தர்களுக்காகக் கோவில் திறந்திருக்கும். ஒரு சில ஆண்டுகளில் தேதிகள் முன்பின் வரலாம்.

### பஞ்ச சாஸ்தா கோவில்கள்

சபரிமலை தவிர அச்சன்கோவில், ஆரியங்காவு, குளத்துப்புழை, எருமேலி, பந்தளம் வவியக்கோவில் ஆகியவை பஞ்ச சாஸ்தா கோவில்கள் என்று போற்றப்படுகின்றன இங்குள்ள ஐந்து கோவில்களும் மகாவிஷ்ணுவின் அவதாரமனா ஸ்ரீ பரசுராமரால் பிரதிஷ்டை செய்யப்பட்டவை.

### அச்சன்கோவில்

இங்கே தர்மசாஸ்தா பூர்ணா- புஷ்கலா தேவியருடன் தம்பதி சமேதராக காட்சி தருகிறார். அவர் அரசன், ஆண்டவன் மருத்துவன் என்று போற்றப்படுகிறார். அச்சன்கோவில் அரசே என்ற ஐயப்ப பக்தர்களின் முழக்கம் பிரசித்தமானது. இன்னொரு குறிப்பிடத்தக்க அம்பசம் இந்த கோயிலுக்கு பெண்கள் அதிக அளவில் வந்து தரிசனம் செய்கிறார்கள். கோயிலில் உள்ள கிணற்று நீர் மருத்துவ தன்மை கொண்டதாக் கருதப்படுகிறது. சற்று அருகாமையில் காவல் தெய்வம் கருப்பசுவாமிக்கு தனிக்கோயில் உள்ளது. இது புனலூரிலிருந்து 40 கிலோ மீட்டர், செங்கோட்டையிலிருந்து 30 கிலோ மீட்டர் தொலைவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆரியங்காவு

இந்த கோவில் கேரள மற்றும் தமிழ்நாட்டு கலாச்சாரத்தைப் பிரதபலிக்கிறது ஐயப்பன் இங்கே குமாரனாக காட்சி அளிக்கின்றான். திரு ஆரியன் என்ற பெயரில் அருள்பாலிப்பதால் இந்த இடம் ஆரியங்காவு என்று பெயர் பெற்றது. சௌராஷ்டிர பெண்ணான புஷ்கலாதேவி ஐயப்பன் திருக்கல்யாண வைபவம் ஆண்டு தோறும் பதினோரு நாட்கள் இங்கே சிறப்பாக நடைபெறுகிறது. ஒவ்வொரு நாளும் ஐயப்பன் வேவ்வேறு அலங்காரத்திலும் காட்சியளிப்பார் ஆரியங்காவு தேவஸ்தனா சௌராஷ்டிர மகாஜன சங்கம் என்ற அமைப்பு மதுரையில் உள்ளது.

திருவிதாங்கூர் மன்னரும் தேவஸ்வம் போர்டும் மதுரையில் உள்ள சௌராஷ்டிரா சமூகத்தினரை திருமண நிகழ்ச்சியில் கலந்து கொள்ள அழைப்பார்கள் இவர்கள் சம்பந்தி முறையில் திருமணத்திற்கான சகல பொருட்களையும் தங்களுடன் எடுத்துக் கொண்டு ஆரியங்காவு செல்வர். இது கொல்லாத்திலிருந்து 70 கிலோ மீட்டர் செங்கோட்டையிலிருந்து 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

## குளத்துப்புழை

கொல்லம் மாவட்டம் தென்மலைக்கு அருகே அமைந்துள்ளது குளத்துப்புழை ஐயப்பன் கோவில் மண்டல மகரவிளக்க் காலத்தில் லட்சக்கணக்கில் ஐயப்ப பக்தர்கள் இங்கு வந்து தரிசம் செய்கிறார்கள். இடந்ரத காட்டின் நடுவே கல்லட நதியின் ஒரு பிரிவான குளத்துப்புழை நதிக்கரையில் அமைந்துள்ளது இந்நத கோவில் குழந்தை உருவில் உள்ள ஐயப்பன் இங்கு மணிகண்டன் என்று அழைக்கப்படுகிறான் இவ்வாலயத்தில் சிவனுக்கும் சாஸ்தாவுக்கும் மஹா விஷ்ணுவிற்கும் சன்னிதிகள் உள்ளன.

இங்குள்ள மஹா விஷ்ணுவின் சிலைவடிவம் அற்புதமானது சிவன் லிங்க வடிவில் இருக்கிறார். சுற்றுப் பிரகாரத்தில் விநாயகருக்கும். தேவிக்கும் கோவில்கள் உள்ளன. இவ்வாலயத்தின் அருகே ஓடும் நதியில் உள்ள மிகப்பெரிய மீன்களுக்கு உணவளிப்பது கண்களுக்கு விருந்தானும். குளத்துப்புழை பாலனே என்று ஐயப்ப பக்தர்கள் ஒலிக்கும் கோஷம் பிரசித்தம். திருவனந்தபுரத்திலிருந்து வடகிழக்காக 60 கிலோமீட்டர், கொல்லத்தில் இருந்து 64 கிலோமீட்டர் தொலைவில் அமைந்திருக்கும் குளத்துபுழை.

## பந்தளம்

பம்பையில் கண்டெடுக்கப்பட்ட ஐயப்பன் ஓடி விளையாடிய இடம் பந்தளம். இது பத்தனம்திட்டை மாவட்டத்தில் அச்சகோவிலாறு கரையில் உள்ளது. குழந்தை ஐயப்பன் வாழந்த பந்தளம் அரண்மணை அரச குடும்பத்தினர் வணங்கிய தேவாரப்புரை, ஆற்றங்கரையில் உள்ள பந்தளம் வலியங்கோவில் ஆகியவை ஐயப்பப் பக்தர்கள் அவசியம் காணவேண்டியவை.

இன்றும் பந்தள மகாராஜா வம்சத்தை சேர்ந்த ஒருவர் இங்கு வரும் ஐயப்ப பக்தர்களுக்கு விபூதி வழங்குகிறார் இங்குள்ள முக்கிய உற்வசம் திருவாபரணம் தலையில் சுமந்து கொண்டு கால்நடையாக மூன்று நாட்கள் காட்டிலும் மேட்டிலும் நடந்து நதியைக் கடந்து ஐயப்பனின் சன்னிதியை அடைகிறார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தை இல்லாத பந்தளராஜா ராஜசேகரன் பம்மை நதிக்கரையில் கண்டெடுத்த ஐயப்பனை கடவுள் தந்த பரிசு எனக் கருதி தனக்குப் பின் சிம்மாசனம் ஏறும் வாரிசாக வளர்த்து வந்தார். ஐயப்பனும் நாளொருமேனியும பொழுதொரு வண்ணமுமாக அறிவும் ஆற்றலும் பெற்று வளர்ந்ர் வந்தான் அச்சன்கோவிலாறு கரையில் அமைந்திருக்கும் ஆலயத்திலுள்ள தர்ம சாஸ்த பந்தளம் ராஜாவின் தர்ம தேவனாகத் திகழ்கிறார். இந்த கோவிலின் அருகாமையில் உள்ள சிராம்பிக்கல் மாளிகையிலிருந்து பக்தர்கள் புடைசூழ கோஷங்கள் திருவாபரணப் பெட்டி சபரிமலைக்கு எடுத்து செல்லப்படுகிறது. மகர விளக்கோடு சம்பந்தப்பட்ட முக்கிய நிகழச்சி இது. பந்தளம் செங்கனூர் இரயில் நிலையத்திலிருந்து 12 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது.

### எருமேலி

பெருவழிப்பாதை மற்றும் சாலக்காயம் வழியாக யாத்திரை செல்லும் ஐயப்ப பக்தர்கள் எல்லோரும் ஒன்று கூடும் இடம் எருமேலி இங்கே தரமசாஸ்தா வில்லும் அம்பும் ஏந்தி காட்சியளிக்கிறார். எருமேலியில் கொச்சப்பலம் சாஸ்தா கோவில் மற்றும் சுற்றியுள்ள இடங்களிலிருந்து ஒலிக்கும் சங்கின் ஓசையும் சரண கோஷமும் வாவர் மசூதியிலிருந்து எழும் தொழுகையின் அழைப்பையும் ஒருங்கே கேட்கலாம்.

### பேட்டைத் துள்ளல்

பேட்டைத் துள்ளல் என்பது பக்தர்கள் கூட்டதாகத் துள்ளி ஆடும் ஓர் ஆவேச ஆட்டமாகும் இசைக் கருவிகளின் முழுக்கத்தின் பின்னணியில் ஐய்ப்ப பக்தர்கள் பேட்டைத் துள்ளலில் கலந்து கொள்வார்கள். முகத்திலும் உடலிலும் வண்ணப் பொடிகளைப் பூசிக்கொள்வார்கள் இவ்வாறு பூசிக்கொள்வதன் மூலம் யாத்திரையைத் தொடங்குமுன் அவர்கள் தான் எனும் ஆணவத்தை ஒழித்துக் கொள்கிறார்கள் என்று கருதப்படுகிறது.

ஒவ்வொரு கன்னி ஐயப்பனும் கன்னி மாளிகப்புறமும் பேட்டைத் துள்ளல் கண்டிப்பாக மேற்கொள்ள வேண்டும். இரண்டாவது முறையாக மலைக்குச் செல்பவர்கள் கன்னி ஐயப்பன்மார்களுக்கும் கன்னிமாளிகப்புறங்களுக்கும் பேட்டைத் துள்ளலுக்கான அலங்காரங்களைச் செய்ய வேண்டும். பேட்டைத் துள்ளலின் போது வாத்திய இசை அதிக ஒலியுடன் இசைக்கப்படும். பேட்டைத் துள்ளல் ஏன் நடைபெறுகிறது என்பதற்குப் பல காணங்கள் கூறப்படுகின்றன.

ஐயப்பனை அழிக்க வந்த அசுரன் எருமை வடிவெடுத்து வந்திருந்தான் அதன் காரணமாகவே அந்த இடத்துக்கு எருமேலி என்ற பெயர் வந்தது. எருமை வடிவில் வந்த அசுரனை ஐயப்பன் அழித்துவிட்ட செய்தி நாடெங்கும் பரவியது. அதைக் கொண்டாடுவதற்காவே மக்கள் பேட்டைத் துள்ளல் ஆட்டத்தை ஆடினர்.

உதயணன் என்ற கொள்ளைக்காரன் அந்தப் பகுதி மக்களுக்கு பெரும் தொல்லைக்கொடுத்து வந்தான் அவனை அடக்கச் சென்ற ஐயப்பனுக்கும் அவனது படைவீரர்களுக்கும் துணையாக அம்பலப்புழை மற்றும் ஆலங்காட்டியிருந்து மக்கள் சென்றனர்.

இதற்காகவே இவ்விரு ஊர் மக்களுக்கும் பேட்டைத் துள்ளலின் போது தனிமரியாதை வழங்கப்படுகிறது. ஐயப்பன்மார் இருமுடிக்கபட்டுகளுடன் தம்மை மறந்து ஆடுவது பிரமிப்பூட்டுவதாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பலப்புழை- ஆலங்காடு ஐயபபன்மார் பேட்டைத் துள்ளலை மிக ஆரவாரமாக நிகழ்த்துவார்கள், இதற்காக அவர்கள் தனிப் பயிற்சி பெற்றிருப்பார்கள். இரு ஊர்க்காரர்களும் தங்கள் திறமையைப் காட்ட ஆவேசமாக ஆடுவார்கள். இந்தப் போட்டி நட்புறவுடன்தான் நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது. பேட்டைத் துள்ளலின்போது பக்தர்கள் தொடரந்து ஐயப்பத் திந்தக்கத் தோம், சுவாமி திந்தக்கத்தோம், என்று உரக்கப் பாடி ஆடிக்கொண்டிருப்பார்கள். எருமெலியில் உள்ள கொச்சம்பலத்திலிருந்து பேட்டைத்துள்ளல் தொடங்கும்.

அம்பலப்புழைக் குழுவினரின் பேட்டைத் துள்ளலில் அலங்கரிக்கப்பட்ட மூன்று யானைகள் தர்மசாஸ்தாவின் உருவாத்தைத் தாங்கி வர துள்ளல் ஆடுவோர் ஐயப்பனின் நண்பரான வாவர் மசூதிக்குச் செல்வர். அங்கு அவர்களுக்கு மரியததை வரவேற்று அளிக்கப்படும். வாவரின் பிரதிநிதி ஒருவர் இக்குழுவினரோடு வலியம்பலத்துக்குச் செல்வார்.

ஆலயங்காடு இரு குழுவினரின் பேட்டைத் துள்ளல்கொச்சம்பலத்திலிருந்து நேராக வலியம்பலத்தை அடையும் பொழுது அவர்களுக்கு சிறந்த வரவேற்பு அளிக்கப்படும் போவிலை வலம் வந்த பின் பேட்டைத் துள்ளல் நிகழச்சி நிறைவு பெறும் அதன்பின் அம்பலப்புழை- ஆலங்காடு ஐயப்பன்மார் சமூக விருந்தில் கலந்து கொள்வார்கள். எருமேலி இந்து- முஸ்லீம் ஒற்மை மற்றும் மதநல்லினக்கத்தின் அடையளாமாக திகழ்கிறது எருமேலி கோட்டயத்திலிருந்து 38 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது.

## பதினெட்டாம்படி தத்துவமென்ன?

ஏகாஷரத்தையும் - அஷ்டாஷரத்தையும் பக்கத்தில் எழுதினால் 18 வரும் ஏகாஷரம் என்பது ஹ்ரிம் என்கிற புவனேஸ்வரி மந்திரம் அஷ்டாஷ்ரம் விஷ்ணுவினுடைய சிவசக்தியுடன் கலந்த விஷ்ணு சக்தியே இந்த பதினெட்டுபடிகள் என்பன.

புராணங்கள் பதினெட்டு சித்திகள் பதினெட்டு ஸ்மிருதிகள் பதினெட்டு தேவ அசுரர் போர் பதினெட்டு நாள் தர்மத்தை நிலை நாட்ட பாரதப்போர் பதினெட்டுநாள் கீதையின் அத்தியாயங்கள் பதினெட்டு இதைப்போல் மனித வாழ்வை இயக்கும் பதினெட்டு அம்சங்களில் அடிப்படையில் அமைக்கப்பட்டவை.

ஐயப்பன் சந்நிதானத்தில் உள்ள பதினெட்டுப்படிகளும் 5 பஞ்சேந்திதியங்கள் 8 ராகங்கள், 3 குணங்கள் ஞானம் ஒன்று அஞ்ஞானம் ஒன்று என்ற பதினெட்டையும் தாண்டி வருகின்ற பக்தனுக்குதான் ஐயனை வழிப்பட தகுதி உண்டு. பற்றதல் இல்லாமல் பகவானை பூஜித்தால் அவன் திருவருள் நமக்கு கிடைக்காது.

(இன்னொரு விளக்கம்)
நான்கு வேதங்கள், ஆறு சாஸ்திரங்கள் நான்கு உபாயங்க்ள, நான்கு வர்ணங்கள் இவற்றை அந்த பதினெட்டு படிகளும் குறிப்பிடுவதாக சில பெரியோர்கள் கூறுவதுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதினெட்டாம் படியின் தத்துவம்

### படியின் விளக்கம்

| | | |
|---|---|---|
| 01. காமம் | 02.குரோதம் | 03. லோபம் |
| 04. மோகம் | 05. மதம் | 06. மாத்சர்யம் |
| 07. நிலம் | 08. நீர் | 09. நெருப்பு |
| 10. காற்று | 11. வானம் | 12. ஸதவகுணம் |
| 13. ரஜோகுணம் | 14. தமோகுணம் | 15. வித்னய |
| 16. அவிந்தமை | 17. சத்யம் | 18. தர்மம் |

தத்துவங்கள் புலன் 5, பிரான் 5, மனம் 1, புத்தி 1, ஆங்காரம் 1 இவைகளை கடந்தனே கடவுளைக் காணமுடியும்.

# பதினெட்டாம் படி

திருவாங்கூர் தேவஸ்வம் போர்டு பதினெட்டுப்படிகளின் புனிதம் கெடாமல் இருக்கு பஞ்சலோகத்தினால் படிகளை அழகுற மூடி பக்தர்கள் சிரமமின்றி ஏறி இறங்க வசதி செய்திருக்கிறார்கள். பக்தர்கள் பதினெட்டுப்படிகளின் இருபுறமும் உள்ள கடுத்தசுவாமி கருப்பசுவாமி முதலிய மூர்த்திகளை வணங்கி ஒரு தேங்காயை உடைத்துவிட்டு பதினெட்டாம் படி ஏறுகின்றனர் இந்தப் பதினெட்டுப் படிகளும் நாம் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய தர்மங்களைக் குறிப்பிடுகின்றன. இப்படிகளுக்கு குறிப்பிட்ட நாட்களில் பூஜைகள் நடைபெறுகின்றன.

கோவிலின் பின்புறம் புனித பஸ்மகுளம் உள்ளது. இருமுடி இல்லாமல் ஐயப்பனை தரிசிக்க வரும் பக்தர்கள் கோவிலின் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள படிகளில் ஏறிச் சென்று ஐயப்பனைத் தரிசனம் செய்கிறார்கள். பக்தரகள் ஆலயத்தை வலம்வந்து தர்மசாஸ்தாவைத் தரிசித்துப் பேரின்பமடைகின்றனர். பின்னர் கன்னிமூலை கணபதியையும் நாகராஜாவையும் வணங்கி இறைவனுக்காகக் கொண்டுவந்த நெய் அடைத்த தேங்காயை உடைத்து நெய்யை ஐயப்பனுக்கு அபிஷேகம் செய்யக் கொடுக்கின்றனர்.

தேங்காய் மூடிகளை அக்னிகுண்டத்தில் இடுகின்றனர். அபிஷேகம் செய்த நெய் பிரசாதம் பெற்றுக்கொண்டு மாளிகாபுறத்தம்மன் கோவிலை வந்தடைகின்றனர். அங்கு நாகராஜா நவக்கிரகங்கள், மாளிகபுத்தம்மன் சன்னிதிகளில் மஞ்சள் பொடி, அரிசி பொரி தூவி தேங்காய் உருட்டி வலம்வந்து கற்பூரம் ஏற்றி வழிபடுகின்றனர். ஊருக்குத் திரும்பும் சமயம் மீண்டும் ஒரு தேங்காய் உடைத்துவிட்டு தங்கள் புனித பயணம் நிறைவேறியதில் மகிழ்ச்சியும் திருப்தியும் அடைகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபரிமலையில் நடக்கும் பூஜைகள்

சபரிமலையில் தனியாக பக்தர்களால் செய்யப்படுகிற பூஜைகள் சில உள்ளன.

## படி பூஜை

சபரிமலையில் படி பூஜை பற்றி தனியாக படிபூஜை செய்கிற தந்திரி ஸ்ரீ ராஜிவ் கண்டரு அவர்களே விபரமாக இந்த புத்தகத்திற்கா எழுதிய கட்டுரையில் எழுதியுள்ளார்கள்.

படிபூஜை கார்த்திகை மார்கழியில் நடத்தப்படுதில்லை பக்தர்கள், படியேறுவதற்கு காலதாமதம் ஏற்படக்கூடாது என்பதற்காக இந்த ஏற்பாடு, படி பூஜைக்கு ரூ.25,000.00 தேவஸ்தானத்திற்கு செலுத்துவது தவிர படி பூஜைக்கு வேண்டிய புஷ்பங்கள் பட்டு துண்டுகள் மற்ற செலவுகள் எல்லாம் மேற்கொண்டு ஆகும். மாத பூஜை நாட்களிலும் தை மாதம் 2 நாட்களுதட மற்றும் நடுவில் சன்னதி திறந்திருக்கும் நாட்களிலும் படிபூஜை இரவு சுமார் 8 மணிக்கு நடத்தப்படுகிறது.

கடந்த ஆகஸ்ட் 2004 எனது ஈரோடு நண்பர் திரு. சிங்காரவேலு சுவாமிக்காக ரூ.25,000.00 சபரிமலை Elective officer வசம் டிராப்டாக நான் கொடுத்து போது 2013ம் வருஷம் மே மாதம் தான் தேதி உள்ளது அதுவரை பதிவு செய்யப்பட்டுவிட்டது என அந்த தேதி கொடுத்தார்கள் 9 வருஷங்களுக்கு படி பூஜைகள் பதிவாகி விட்டது.

## 1008 கலச பூஜை

இந்த பூஜை முதல் நாள் மாலையிலிருந்து மறுநாள் முடிய தந்தியால் நடத்தப்பெறும் இதற்கு செலவு அதிகம் இதற்க சகஸ்ர கலச பூஜை என்ற பெயரும் உண்டு ( சகஸ்ரம் என்றால் ஆயிரம் என்று அர்த்தம்) அந்த பூஜைக்காக 18 முறை சன்னதி திறந்து பூஜை செய்யப்படும். இவைகளில் உபயதார் கலந்து கொள்ளலாம் முன் கூட்டியே பதிய வேண்டும்.

## புஷ்பாஞ்சலி

புஷ்பாஞ்சலி தினமும் இரவு 8 மணி அளவில் ஐயப்பனுக்கு பக்தர்களால் செய்யப்படும் பூஜை புஷ்பாஞ்சலி செய்கிற அன்றே சபரிமலையில் பணம் கட்டி அன்றே செய்யலாம். ஒரு நாளைக்கு 10 புஷ்பாஞ்சலி கூட நடைபெறுகிறது. புஷ்பாஞ்சலி செய்பரே பூக்களை சபரிமலைக்கு கொண்டுவரவேண்டும் சுவாமிக்கு அர்ச்சனை செய்யக்கூடிய ரோஜா, அரளி, துளசி, மல்லிகை என எல்லாவித பூக்களையும் கூடையில் நீங்கள் எடுத்து வர வேண்டும் தேவஸ்தானத்திற்கு ரூ. 750.00 கட்ட வேண்டும்.

## அஷ்டாபிஷேகம்

அஸ்டம் என்றால் எட்டு என்று அர்த்தம் எட்டுவித அபிஷேகப் பொருட்களால் ஐயப்பனுக்கு அபிஷேகம் அபிஷேகம் செய்வதால் இந்த பெயர் கூறப்படுகிறது. விபூதி சந்தனம், பால், பன்னீர் சொர்ணம் ( ஒரு ரூபாய் நாணயம் 108) தேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதினெட்டாம் படியின் தத்துவம்

## படியின் விளக்கம்

| | | |
|---|---|---|
| 01. காமம் | 02.குரோதம் | 03. லோபம் |
| 04. மோகம் | 05. மதம் | 06. மாத்சர்யம் |
| 07. நிலம் | 08. நீர் | 09. நெருப்பு |
| 10. காற்று | 11. வானம் | 12. ஸதவகுணம் |
| 13. ரஜோகுணம் | 14. தமோகுணம் | 15. வித்னய |
| 16. அவிந்தமை | 17. சத்யம் | 18. தர்மம் |

தத்துவங்கள் புலன் 5, பிரான் 5, மனம் 1, புத்தி 1, ஆங்காரம் 1 இவைகளை கடந்தனே கடவுளைக் காணமுடியும்.

# பதினெட்டாம் படி

திருவாங்கூர் தேவஸ்வம் போர்டு பதினெட்டுப்படிகளின் புனிதம் கெடாமல் இருக்கு பஞ்சலோகத்தினால் படிகளை அழகுற மூடி பக்தர்கள் சிரமமின்றி ஏறி இறங்க வசதி செய்திருக்கிறார்கள். பக்தர்கள் பதினெட்டுப்படிகளின் இருபுறமும் உள்ள கடுத்தசுவாமி கருப்பசுவாமி முதலிய மூர்த்திகளை வணங்கி ஒரு தேங்காயை உடைத்துவிட்டு பதினெட்டாம் படி ஏறுகின்றனர் இந்தப் பதினெட்டுப் படிகளும் நாம் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய தர்மங்களைக் குறிப்பிடுகின்றன. இப்படிகளுக்கு குறிப்பிட்ட நாட்களில் பூஜைகள் நடைபெறுகின்றன.

கோவிலின் பின்புறம் புனித பஸ்மகுளம் உள்ளது. இருமுடி இல்லாமல் ஐயப்பனை தரிசிக்க வரும் பக்தர்கள் கோவிலின் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள படிகளில் ஏறிச் சென்று ஐயப்பனைத் தரிசனம் செய்கிறார்கள். பக்தரகள் ஆலயத்தை வலம்வந்து தர்மசாஸ்தாவைத் தரிசித்துப் பேரின்பமடைகின்றனர். பின்னர் கன்னிமூலை கணபதியையும் நாகராஜாவையும் வணங்கி இறைவனுக்காகக் கொண்டுவந்த நெய் அடைத்த தேங்காயை உடைத்து நெய்யை ஐயப்பனுக்கு அபிஷேகம் செய்யக் கொடுக்கின்றனர்.

தேங்காய் மூடிகளை அக்னிகுண்டத்தில் இடுகின்றனர். அபிஷேகம் செய்த நெய் பிரசாதம் பெற்றுக்கொண்டு மாளிகாபுறத்தம்மன் கோவிலை வந்தடைகின்றனர். அங்கு நாகராஜா நவக்கிரகங்கள், மாளிகபுத்தம்மன் சன்னிதிகளில் மஞ்சள் பொடி, அரிசி பொரி தூவி தேங்காய் உருட்டி வலம்வந்து கற்பூரம் ஏற்றி வழிபடுகின்றனர். ஊருக்குத் திரும்பும் சமயம் மீண்டும் ஒரு தேங்காய் உடைத்துவிட்டு தங்கள் புனித பயணம் நிறைவேறியதில் மகிழ்ச்சியும் திருப்தியும் அடைகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபரிமலையில் நடக்கும் பூஜைகள்

சபரிமலையில் தனியாக பக்தர்களால் செய்யப்படுகிற பூஜைகள் சில உள்ளன.

## படி பூஜை

சபரிமலையில் படி பூஜை பற்றி தனியாக படிபூஜை செய்கிற தந்திரி ஸ்ரீ ராஜிவ் கண்டரு அவர்களே விபரமாக இந்த புத்தகத்திற்கா எழுதிய கட்டுரையில் எழுதியுள்ளார்கள்.

படிபூஜை கார்த்திகை மார்கழியில் நடத்தப்படுதில்லை பக்தர்கள், படியேறுவதற்கு காலதாமதம் ஏற்படக்கூடாது என்பதற்காக இந்த ஏற்பாடு, படி பூஜைக்கு ரூ.25,000.00 தேவஸ்தானத்திற்கு செலுத்துவது தவிர படி பூஜைக்கு வேண்டிய புஷ்பங்கள் பட்டு துண்டுகள் மற்ற செலவுகள் எல்லாம் மேற்கொண்டு ஆகும். மாத பூஜை நாட்களிலும் தை மாதம் 2 நாட்களுதட மற்றும் நடுவில் சன்னதி திறந்திருக்கும் நாட்களிலும் படிபூஜை இரவு சுமார் 8 மணிக்கு நடத்தப்படுகிறது.

கடந்த ஆகஸ்ட் 2004 எனது ஈரோடு நண்பர் திரு. சிங்காரவேலு சுவாமிக்காக ரூ.25,000.00 சபரிமலை Elective officer வசம் டிராப்டாக நான் கொடுத்து போது 2013ம் வருஷம் மே மாதம் தான் தேதி உள்ளது அதுவரை பதிவு செய்யப்பட்டுவிட்டது என அந்த தேதி கொடுத்தார்கள் 9 வருஷங்களுக்கு படி பூஜைகள் பதிவாகி விட்டது.

## 1008 கலச பூஜை

இந்த பூஜை முதல் நாள் மாலையிலிருந்து மறுநாள் முடிய தந்தியால் நடத்தப்பெறும் இதற்கு செலவு அதிகம் இதற்க சகஸ்ர கலச பூஜை என்ற பெயரும் உண்டு ( சகஸ்ரம் என்றால் ஆயிரம் என்று அர்த்தம்) அந்த பூஜைக்காக 18 முறை சன்னதி திறந்து பூஜை செய்யப்படும். இவைகளில் உபயதார் கலந்து கொள்ளலாம் முன் கூட்டியே பதிய வேண்டும்.

## புஷ்பாஞ்சலி

புஷ்பாஞ்சலி தினமும் இரவு 8 மணி அளவில் ஐயப்பனுக்கு பக்தர்களால் செய்யப்படும் பூஜை புஷ்பாஞ்சலி செய்கிற அன்றே சபரிமலையில் பணம் கட்டி அன்றே செய்யலாம். ஒரு நாளைக்கு 10 புஷ்பாஞ்சலி கூட நடைபெறுகிறது. புஷ்பாஞ்சலி செய்பரே பூக்களை சபரிமலைக்கு கொண்டுவரவேண்டும் சுவாமிக்கு அர்ச்சனை செய்யக்கூடிய ரோஜா, அரளி, துளசி, மல்லிகை என எல்லாவித பூக்களையும் கூடையில் நீங்கள் எடுத்து வர வேண்டும் தேவஸ்தானத்திற்கு ரூ. 750.00 கட்ட வேண்டும்.

## அஷ்டாபிஷேகம்

அஸ்டம் என்றால் எட்டு என்று அர்த்தம் எட்டுவித அபிஷேகப் பொருட்களால் ஐயப்பனுக்கு அபிஷேகம் அபிஷேகம் செய்வதால் இந்த பெயர் கூறப்படுகிறது. விபூதி சந்தனம், பால், பன்னீர் சொர்ணம் ( ஒரு ரூபாய் நாணயம் 108) தேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சாமிர்தம் இளநீர் ஆகியவை சுத்தமானதாக நீங்களே எவ்வளவு உங்களால் முடியுமோ அவ்வளவு கொண்டு வர வேண்டும். இது தவிர சிலர் கங்கை நீர், தயிர், போன்ற அபிஷேகப் பொருட்களும் கொண்டு வருகின்றனர். காலை 9 மணி அல்லது 10 மணிக்கு பக்தர்களின் நெய் அபிஷேக கூட்டமில்லாத நேரத்தில் மேல் சாந்தியால் இது செய்யப்படுகிறது. தேவஸ்தானத்திற்கு ரூபா.500.00 கட்ட வேண்டும் முன்பதிவு செய்யத்தேவையில்லை.

அஸ்டாபிஷேகம் சமயம் 15 பேர் வரை ஐயப்பன் முன்னால் (உண்டியல் அருகில்) 15 நிமிடம் வரை தரிசனம் செய்யவும் பலவித அபிஷேகங்களில் ஐயனை கானும் பாக்கியம் கிடைப்பதாலும் எங்களுக்கு மிகவும் பிடித்த பூஜை அஷ்டாபிஷேகம் தான். அபிஷேகம் செய்த பொருட்களில் பொரும்பகுதியை நம்மிடமே திருப்பித் தருவதால் அதை ஊருக்கு கொண்டு வந்து அனைவருக்கும் விநியோகிக்கலாம். எங்கள் சபரிமலை அன்னதானத்தை நல்லபடியாக ஐயன் நடத்திக் கொடுப்பதற்கு ஜனவரி 18ல் எங்கள் அன்னதானக் கமிட்டி சார்பில் ஒரு அஷ்டாபிஷேகம் செய்து வருகிறோம். அன்று கிடைக்கும் ஆனந்தம் கோடி ரூபாய் கொடுத்தாலும் கிடைக்காது

## படி பூஜை

சபரிமலையில் பிரதான வழிபாடு படி பூஜையாகும் 18 மலைகளால் சூழப்பட்ட புண்ணிய ஷேத்திரமாகும் சபரிமலை இந்து மத ஆசாரப்படி சபரிமலைக்கு போகுமுன்பாக சில முக்கிய கோயில்களில் (ஷேத்திரங்களில்) தரிசனம் செய்துவிட்டு போகவேண்டும் சபரிமலையில் 18 வண தேவதைகள் 18 படியில் குடி கொண்டுடிக்கின்றன 18 தேவதைகளையும் படியில் ஆவாஹனம் செய்து அவர்களை பூஜிப்பது தான் படி பூஜை

## 18 மலைகளின் பெயர்கள்

01. தலைப்பறை மலை
02. காள கெட்டி மலை
03.புதுச்சேரி மலை
04.கரிமலை
05.இஞ்சிப்பாறை மறை
06. நிலக்கல்
07. தேவர் மலை
08. ஸ்ரீ பாத மலை
09. வட்ட மலை
10. சுந்தரமலை
11. நாகமலை
12. நீலிமலை
13. சபரிமலை
14. மயிலாடும் மலை
15. மதங்க மலை
16.சிற்றம்பல மலை
17. கவுண்டன் மலை
18.பொன்னம்பல மேடு (காந்தமலை)

ஆகிய 18 மலைகள் இந்த வன தெய்வங்களை குடியிருத்தியுள்ளது. 18படி பொன்னு 18படி என்று பொதுவாக கூறப்படுகிறது. பிரத்யேக பூஜை விதிகளின்படி படி பூஜை நடத்தி வரப்படுகிறது. இந்த பூஜை தழமண்டலம் தந்திரிகள் மட்டுமே செய்ய வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயாஸ்தமன பூஜை

சபரிமலையில் பிரத்யேக வழிபாடு உதயாஸ்தமக பூஜை எல்லா மாதங்களிலும் இப் பூஜை நடத்தப்படுகிறது. உதயம் முதல் அஸ்தமனம் வரை செய்யப்படும் பூஜைகள் உஷ பூஜை முதல் அத்தாழ பூஜை வரை மொத்தம் செய்யப்படும் 18 பூஜைகள் உதயாஸ்தனமான பூஜை. அந்த 18 பூஜைகளையும் நடத்தும் பக்தர்கள் தரிசிக்கலாம் இதனால் பிரத்யோக ஐஸ்வர்யம்கிடைக்கும் ஒரு நாளைக்கு மூன்று பூஜைகள் சபரிமலையில் செய்து வரப்படுகிறது. உஷ பூஜை ,உச்ச பூஜை அத்தாழ பூஜை இந்த மூன்று பூஜைகளும் பக்தர்கள் முன்பாகவே பதிவு செய்யப்படுகின்றதுஒவ்வொரு பூஜைக்கும் பிரத்யே நைவேத்யங்கள் உண்டு.

## புஷ்பாபிஷேகம்

பக்தர்கள் நல்ல புஷ்பங்களை பக்திப் பூர்வமாக கொடுக்க வேண்டும் உப தேவகைளான கணபதி. நாகராஜா முதலியவர்களுக்கு அபிஷேகம் செய்த் பிறகுதான் ஐயப்பனுக்கு செய்யப்படும் ஒவ்வொரு அபிஷேகத்திற்கும் தீபாராதனை செய்யப்படும். இந்த பூஜைக்கு தற்சமயம் நிறைய கூட்டம் வருகிறது. நல்ல புஷ்கங்களை சுத்தமானதாக எடுத்து வரவேண்டும்.

## கலபாபிஷேகம்

சுத்தமான சந்தனத்தை அரைத்து மண்டபத்தில் பிரத்யோகமாக பூஜை செய்து தனிக்கலசத்தில் சந்தனம் நிறைந்து பூஜை செய்து முன்மண்டபத்தில் வைக்கப்படும். பிறகு உச்ச பூஜைக்கு முன்னால் தந்திரியும் மேல் சாந்திய் சேர்ந்து வாத்தியங்களோடு கோயில் பிரகாரம் சுற்றிவந்து சுவாமிக்கு அபிஷேகம் செய்யப்படும்.

## உதயாஸ்தமன பூஜை

இந்த பூஜை சபரிமலையில் காலை முதல் இரவு வரை 18 முறை செய்யப்படும். அத்தனையிலும் உபயதாரர் அவரைச் சார்ந்தவர்களுடன் தரிசனம் செய்து பிரசாதம் பெறலாம். இதற்கு முன்பாகவே பதிவு செய்ய வேண்டும்.

கணபதி ஹோமம்
இது தினமும் காலை 4.30 மணிக்கு சபரிமலையில் ஸ்ரீ கோயில் முன்பாக ஷோபாவனத்தில் (நாம்சாமி கும்பிட நிற்கும் இடத்திற்கு பின்புறம் உள்ள மேடையில்) தினமும் நடைபெறும் பக்தர்கள் 50 பேர் வரை கலந்து கொள்ள அனுமதிக்கிறார்கள் முதல் நாள் மாலை 7 மணிக்கு சபரிமலை தேவஸ்தான ஆபீசில் நபருக்கு 50 ரூபாய் வீதம் பணம் கட்டி ரசீது பெற்றுக்கொள்ளவேண்டும். கணபதி ஹோமத்தில் கலந்து கொள்பவர்கள் ஐயப்பனை காலை நடைதிறப்பு பூஜையில் தரிசனம் செய்யலாம் முடிந்தால் அப்போதே உங்களுடைய நெய் அபிஷேகம் செய்து கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகர ஜோதி

தர்மசாஸ்தாவுக்கும் மாளிகப்புத்தம்மனுக்கும் அணிவிக்கும் திருவாபரணங்கள் அடங்கிய பெட்டிகளைப் பந்தளம் அரண்மனையிலிருந்து பக்தர்கள் புடைசூழ தலையில் சுமந்துகொண்டு வந்து மகர சங்கராந்தியன்று மாலையில் சன்னிதானத்தில் சேர்ப்பிக்கின்றனர். திருவாபரணப் பெட்டிகளைக் கெண்டு வரும்போது அவர்களுக்கு மேலே இரண்டு கருடன்கள சன்னிதானம் வரை பறந:து வந்து பின் கோவிலை வலம் வந்து சென்றுவிடுகின்றன.

ஆபரணங்களை சுவாமிக்கு அணிவித்து பூஜை ஆரம்பமானவுடன் கீழ் வானில் ஒரு நட்சத்திரம் தோன்றுகிறது. தர்மசாஸ்தா சன்னிதானத்தில் கூடியிருக்கும் லட்சக்கணக்கான பக்தர்கள் பொன்னம்பலமேடு எனற் இடத்தில் தோன்றும் ஜோதி தரிசனம் கண்ட பேரானந்கதட அடைகிறார்கள்.

மகரஜோதியின் மறுநாள் சன்னிதானத்தில் ஆலங்காடு குழுவினரால் நடத்தப்படும் சிறப்பு சீவேலியில் அலங்கரிக்கப்பட்ட யானையின் மேல் உற்ச மூர்த்தி மானிகப்புத்தமன் கோவில் இருந்து பாரம்பரிய இசை முழுங்கப் புற்ப்பட்டு புனித பதினெட்டாம்படியை வந்தடைகிறது. அங்கே பூஜை நடைபெறும். இரண்டாம் நாள் படிபூஜையும் மூன்றாம் நாள் மாளிகப்புத்தில் பலநிறப் பொடிகளால் உருவாக்கப்பட்ட ஐயப்பன் கோலத்திற்கு (கலமேலெழுத்து) பூஜையும் நடைபெறுகிறது.

நான்காம் நாள் சந்தன அபிஷேக சிறப்பு ஆராதனை சன்னிதானத்தில் நடைபெறும் ஐந்தாம் நாள் மாளிகப்புத்தம்மன் பக்தர்கள் புடைசூழ மேளதாளத்துடன் யானைமீது அமர்ந்து சரங்குத்திக்கு வருகிறார். அங்கே கன்னி ஐயப்பன்மார்களால் சொருகப்பட்ட அம்புகளைக் கண்டு ஏமாற்றமடைந்து தன் இருப்பிடம் திரும்பி கன்னியாகவே காத்திருக்கிறாள். ஐயப்பன் நைஷ்டிக பிரம்மாச்சாரியாக யோக நிலையில் அமர்ந்து அருள்பாலிக்கிறார். ஆறாம் நாள் சிறப்பு பூஜையுடன் நடைசாத்தப்பட்டு விழா நிறைவடைகிறது.

# ஐயப்பனின் சின் முத்திரை

சின் முத்திரை என்று சொற்றொடர் ஞான அடையாளம் எனப் பொருள்படும். சித் ஞானம் முத்திரை அடையாளம் எனவே ஞானப் பொருளின் அடையாளமாக குறிப்பாக திகழ்வது சின் முத்திரை எனலாம்.

ரிஷிகள், யோகிகள் போன்ற மகாதவசிகள் தவம் செய்யும் போது ஒரு விரல் நுனியுடன் ஆள்காட்டிவில் நுனியைச் சேர்த்தும் நடுவிரல் மோதிரவிரல் சுண்டுவிரல் மூன்றையும் நீக்கி முத்திரை காட்டுவார்கள் அதுவே சின் முத்திரையாகும்.

சபரிமலையில் ஸ்ரீ ஐயப்ப சுாவமி வலது கரத்தால் சின் முத்திரை காட்டி பக்தர்க்கு அருளாசி வழங்குவதையும் காண்கிறோம். பெருவிரல் நுனி இது பிரம்பத்திலிருந்து தோன்றுவதே ஜீவன். தன் பணியை முடித்தபின் முடிவில் ஒடுங்குமிடம் எதுவோ அது பிரம்மம் ஆகும்.பிரம்மம் இல்லையேல் ஜீவன் இல்லை. ஜீவர்களின் உற்பத்தியில்லையே பிரம்மத்திற்கும் வேலையில்லை. பிரம்மம் எதனுடனும் சேராமல் பிரம்மாகவே தனித்து இயங்கும் அதனால் சிருஷ்டி ஏற்பட வழியே கிடையாது இவ்விரண்டு காரியங்கயையும் குறிக்கவே பெருவிருல் நுனியுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆள்காட்டி விரல் நுனியையும் சேர்த்து நமக்கு உணர்த்துகின்றனர். ஆன்றோர் ஆனால் இந்த காரியம் ஒழுங்காக நடைபெற வேண்டுமெனில் விலக்கப்பட வேண்டியவை ஆணவம், கன்மம் மாயை ஆகும். ஏனைய மூன்று விரல்களும் இம் மூன்றையும் குறிப்பனவாகும். இதுவே தவசிகளிடமிருந்து ஞானாசிரியகளிடமிருந்து நாம் தொரிந்துகொள்ள வேண்டிய உண்மையாகும்.

## சபரிமலையில் வழிபாடு
## (செய்ய வேண்டியவைகள்)

01. பொண்ணு பதினெட்டு படி நெருங்கியதும், படிக்கு வலதுபுறம் சுவற்றில் நிதறு தேங்காய் உடைக்க வேண்டும். உடன் நமது மனதில் ஐயனிடம் பிராத்திப்பதை மனதில் வேண்டிக் கொண்டு 18 படிகளையும் தொட்டு வணங்கிக்கொண்டே 18 படி ஏற வேண்டும்.

02. தீபஸ்தம்பம் (கொடிமரத்தை) வணங்கி பின் நிதானமாக வரிசையில் நின்று அகிலாண்டகோடி நாயகன் ஐயன் ஐயப்பனை திவ்ய தரிசனம் செய்து மனமுருக வேண்டவேண்டும். நமது குறைகளை கூறி நிவர்த்திக்க வேண்ட வேண்டும்.

03. சன்னிதானத்தின் மேலேயுள்ள கன்னிமூல கணபதியை வலம் வந்து கற்பூரம் ஏற்றி வணங்க வேண்டும்.

04. வேண்டுதல் இருந்தால் மணி கட்ட வேண்டும்.

05. கணபதி கோயிலுக்கு அருகில் உள்ள நாகராஜா ( ஸ்ரீ சன்முக சுவாமி சன்னதியை) வணங்கி பன்னீர், சந்தனம் ஊதுபத்தி, கற்பூரம் போன்றவற்றை வைத்து சுவாமியை வணங்க வேண்டும்.

06. சன்னிதானத்திலிருந்தே நடைமேடை வழியாக மஞ்சாமாதா கோயில் அடைந்து முதலில் கடுத்தாசமியை வணங்கி அவல் நெல் பொரி, வெல்லம், பழம், கற்கண்டு தேய்காய், வறுத்த பொடி காணிக்கை இங்கு வைக்க வேண்டும். கருப்பசுவாமிக்கு திராட்சை பழம், கற்பூரம் காணிக்கை வைத்து வணங்க வேண்டும்.

07. சர்ப்ப தோஷம் சத்ரு தோஷம் ஏற்படாமல் இருக்க அங்குள்ள புள்ளுவன்களிடம் அமர்ந்து பாட்டு படிக்க வேண்டும்.

08. மணிமண்பம் சுற்றி வந்து வணங்க வேண்டும்

09. அடுத்த நாகராஜா நாகயட்சி ஆகிய தெய்வங்களுக்கு கற்பூரம் கொளுத்தி வணங்க வேண்டும்.

10. நவக்கிரகங்களை 9 முறை சுற்றி வந்து கற்பூரம் கொளுத்தி வணங்க வேண்டும்.

11. மலை தெய்வங்களை (காட்டு தேவதைகளை) மஞ்சள் பெடி தூவி வணங்கி வலம் வர வேண்டும்.

12. மஞ்சமாதா எழுந்தருளியுள்ள கோயிலை முழுத் தேங்காயை கிழே உருட்டி கோயிலை வலம் வர வேண்டும். இந்த மாளிகைப்புரத்தம்மா சன்னதியில் அம்மனுக்கு பட்டு துண்டு மஞ்சள் பொடி குங்கமம், வெற்றிலை பாக்கு வைத்து வணங்க வேண்டும். வணங்கிய பின் அம்மனை தொழுதபடியே முதுகை கோயில் பின் பக்கம் பார்த்த படி இறங்கி தங்குமிடம் செல்ல வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. வாபர் கோயிலில் சென்று நெல் மிளகு ஊதுபத்தி வைத்து வணங்க வேண்டும். அவரவர் இருமுடி கட்டுப்பிரித்து குருநாசாமி மூலம் நெய் தேங்காய் உடைத்து மஞ்சமாதா கோயிலுக்கு அருகில் கிடைக்கும் நெய் அபிஷேக சீட்டு பெற்று அய்யன் பூதநாதனுக்கு நம் நெய் அபிஷேகம் செய்து தரும் நெய்யை பெற்று வர வேண்டும் டப்பாவில் நெய்யை அடைத்துக் கொள்ள வேண்டும்.

14. அரவணப்பாயசம் அப்பம் வாங்கி கொள்ளவேண்டும்.

15. திரும்ப செல்லும்போது (அனுமதித்தால் 18படி ஐயப்பனை பார்ததபடி இறங்கலாம்) 18 படிக்கு அருகில் நிதறு தேங்காய் உடைக்க வேண்டும்.

16. ஓமகுண்டத்தில் ஒரு தேங்காய் மூடி போட வேண்டும்

17. பம்பை திரும்ப வேண்டும்.

சன்னதியில் வைத்து பூஜை செய்து மணிகண்டனை (சிறுவனை) வைத்து ஒரு வெள்ளிப்பாத்திரத்தில் இருந்து ஒரு சீட்டும் மற்றொரு வெள்ளிப் பாத்திரத்தில் இருந்து மற்றொரு சீட்டும் எடுப்பார்கள். யார் பெயரோடு மேல் சாந்தி என்று எழுதிய சீட்டு வருகிறதோ அவர்தான் மேல் சாந்தியாக நியமிக்கப்படுவார். இதுபோல ஒவ்வொரு பதவிக்கும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இது ஒவ்வொரு ஆண்டும் ஐப்பசி மாதம் 1ம் தேதி நடைபெறும் தந்திரிகள் பரம்பரையாக வருவார்கள்.

**தாழமண் குடும்பத்தின்**

சபூரிமலையில் அனைத்து பூஜைகளுக்கும் தலைமை வகிப்பது

| | | | |
|---|---|---|---|
| 01. | அச்சங்கோயில் | - | ஐயப்பன் அரசனாக அருள் தரும் கோயில் |
| 02. | அத்தாழ பூஜை | - | அர்த்தசாம பூஜை |
| 03. | அம்பலப்புழா வேலகழி | - | தாள லயத்துடன் கற்றுத்தரப்படும் ஒரு ஆயுதப் பயிற்சி |
| 04. | ஆலங்காட்டுச்சங்கம் | - | எரிமேலியில் பேட்டைதுள்ளி மலையேறும் சங்கம், இச்சங்கம் ஆலங்காட்டு யோகம் என்றும் அழைக்கப்படுகிறது. |
| 05. | ஆறாட்டு | - | ஐயப்பன் பம்பை நதியில் நீராடிச் செல்லும் விழா |
| 06. | ஆரியங்காவு | - | மதகஜவாகனனாக பூர்ணா - புஷ்கலை சமேதாரா ஐயப்பன் அருள் தரும் தலம் |
| 07. | இருமுடிக்கட்டு | - | புனிதமானது, முன்முடி ஐயப்பனுக்கு உரியது பின்முடி வழித் தேவைக்கு உரியது. |
| 08. | இப்பாச்சிக் குழி | - | அப்பாச்சி மேட்டின் அருகே உள்ள பள்ளம் |
| 09. | இஞ்சிப்பாறை | - | பெருவழியில் உள்ள ஒரு பாறையின் பெயர் |
| 10. | இடைத்தாவளம் | - | இளைப்பாறும் இடம் |
| 11. | இலவந்தோடு | - | உடும்பாறைக் கோட்டைக்கு அடுத்த இடம் |
| 12. | இரும்பூன்னிக்கர | - | பெருவழியில் உள்ள ஒரு ஊர் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 13. உதயணன் | - | கரிமலைக் கோட்டையில் வாழ்ந்து வந்த ஒரு காட்டுக் கொள்ளைக்காரன் |
| 14. உடும்பாறைக் கோட்டை | - | கரிமலை தொடக்கத்தில் உள்ள கோட்டை |
| 15. உரல்குழி | - | சன்னிதானத்தில் இருந்து 1 கீ.மீ. தொலைவில் கும்பளம் தோட்டில் உள்ள அருவி. |
| 16. உஷ பூஜை | - | காலை நேர பூஜை |
| 17. எலவந்தா வளம் | - | புதுச்சேரி ஆற்றோரம் அமைந்த இடம் |
| 18. ஐயப்ப மந்திரம் | - | ஒவ்வொரு ஆண்டும் மேல்சாந்தி பதவி ஏற்கும் பொழுது தந்திரி சொல்லிக் கொடுக்கும் மந்திரம் |
| 19. ஐயப்பன் விளக்கு | - | முதன்முறையாக சபரிமலை செல்லும் கன்னி ஐயப்பமார்கள் நடத்தும் சடங்கு |
| 20. ஐயப்பன் ஒருகோயில் | - | ஐயப்பன் குருகுல வாசம் செய்த இடம். பந்தளத்தில் இருந்து 4 கீ.மி தூரத்தில் உள்ளது. |
| 21. களபாபிஷேகம் | - | தை மாதம் 5ம் தேதி பந்தள மன்னர் முன்னிலையில் சாஸ்தாவுக்குச் செய்யப்படும் சந்தன அபிஷேகம். |
| 22. கன்னிச்சாமி | - | முதன்முறையாக சபரிமலை செல்லும் ஐயப்ப பக்தன் |
| 23. கல்பாத்தி கோயில் | - | தேரோட்டம் நடைபெறும் முக்கியமான ஐயப்பன் கோயில் |
| 24. கரிவலந்தோடு | - | பெருவழியில் உள்ள ஒரு இடம் |
| 25. கரிமலை | - | பெருவழியில் உள்ள ஒரு உயர்ந்த மலை |
| 26. காணிப்பென் | - | சன்னிதானத்தில் சுவாமிகள் பாதத்தில் வைத்துப் பூஜை செய்து தரும் காசு. |
| 27. காந்தமலை | - | பொன்னம்பல மேட்டின் மற்றொரு பெயர் |
| 28. குருஸ்வாமி | - | சபரிமலை யாத்திரைய வழி நடத்தி செல்பவர் |
| 29. குருதி பூஜை | - | மாளிகைபுரத்தில் நடத்தப்படும் பூஜை |
| 30. குருநாதன் முகடு | - | ஐயப்பனுக்கு ஆயதப்பயிற்சி தந்த குருநாதன் சமாதியடைந்த மலை |
| 31. குளத்துப்புழை | - | ஐயப்பன் குழந்தை வடிவில் அருள் தரும் தலம் |
| 32. கொச்சு கடுத்தன் | - | ஐயப்பனின் போா் வீரன் |
| 33. கொச்சு வேலன் | - | ஐயப்பனுடன் வனப்பயணத்தில் உடன் சென்றவா் |
| 34. கொச்சும்பலம் | - | சிறிய கோவில் |
| 35. கோப்தா | - | பரிவார தெய்வம் |
| 36. கோட்டைப்படி | - | தர்மசாஸ்தாவில் பூங்காவன வாயில |
| 37. சர்பப்பாட்டு | - | பக்தர்களின் சா்ப்பதோஷம் நீங்குவதற்காக மாளிகைபுரத்தம்மன் சன்னதியில் நடத்தப்படும் வழிபாடு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 38. சபரீபீடம் | - | பெண்முனிவராகிய அன்னை சபரி வாழந்த இடம் |
| 39. சரம் குத்தி | - | ஐயப்பமார்கள் சரம் குத்துமிடம். அம்புகள் விடும் இடம் |
| 40. சகஸ்ர கலசாபிஷேகம் | - | 1008 கலசங்கள் வைத்து பூஜை செய்து ஐயப்பனுக்கு அபிஷேகம் செய்யும் வழிபாடு |
| 41. சபரி நந்தவனம் | - | ஐயப்பன் பூங்காவனம் |
| 42. சரமிடுதல் | - | எரிமேலியிலிருந்து வந்த சரங்களை விடும் சடங்கு |
| 43. சரணம் ஐயப்பா | - | ஐயப்பனை வழிபடும் சரணம் |
| 44. சாஸ்தாபாட்டு | - | மலையாளத்தில் ஏழு பாகங்களாக உள்ளது. ஐயப்பனது அருட்சரித்திரம் |
| 45. சிரம்பிக்கல் மாளிகை | - | பந்தளத்தில் ஐயப்பனது திருவாபரணங்களை பாதுகாப்பாக வைத்திக்கும் அரண்மனை |
| 46. சிறியானை வட்டம் | - | யானைகள் தங்குமிடம் |
| 47. சித்தாபுதூர் ஐயப்பன் கோயில் | - | இரண்டாவது சபரிமலை, கோவையில் உள்ள ஐயப்பன் கோயில் |
| 48. சின்முத்திரை | - | ஐயப்பனது வலதுகரம் காட்டுவது.மூன்று விரல்களை நீக்கி ஆள்காட்டிவிரல் பெருவிரலோடு ஒன்றிய நிலையில் காட்டுவது சின் முத்திரை |
| 49. சீனித்தாவளம் | - | பெருவழியில் இரண்டு பெரிய சீனி மரங்கள் உள்ள இடம் |
| 50. சீவேலி | - | சன்னதியைச் சுற்றி வரும் சுவாமியின் ஊர்வலம் |
| 51. சீரப்பஞ்சிரா மூப்பன் | - | ஐயப்பனுக்கு ஆயுதப் பயிற்சியும் உடற்பயிற்சியும் அளித்தவர் |
| 52. சுக்குப்பாலம் | - | பெருவழியில் உள்ள ஒரு பாலத்தின் பெயர் |
| 53. சென்னையின் சபரி | - | ராஜா அண்ணாமலைபுரத்தில் உள்ள ஐயப்பன் கோயில் |
| 54. சொரிமுத்தையன் கோயில் | - | பாபநாசத்தில் உள்ள ஐயப்பன் கோயில் |
| 55. தலப்பாற மலா | - | பெருவழியில் உள்ள கோயில். இதற்கு அரசுமுடிக் கோட்டை என்றும் பெயர் உண்டு |
| 56. தாழமண் | - | பூஜைகளுக்கு தலைமைப் பொறுப்பேற்றும் நகர் |
| 57. திருவாபரணம் | - | ஐயப்பனது நகைகள் |
| 58. திரிவேணி | - | பம்பையில் மூன்று நதிகள் சந்திக்குமிடம் |
| 59. திருவெள்ளைக்காவு சாமரவட்டம், நெட்டிசேரி | - | கேரளாவில் சாஸ்தா கோயில் உள்ள இடங்கள் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 60. | பம்பா சத்யா | - தைப்பொங்கலுக்கு முதல் நாள் பம்பையில் நடத்தப்படும் அன்னதானம் |
| 61. | பறைக்கொட்டிப்பாட்டு | - பக்தர்களின் தோஷம் விலகுவதற்காக மாளிகைபுரத்தில் செய்யப்படும் வழிப்பாடு |
| 62. | பஸ்மக்குளம் | - சன்னிதானத்திற்கு அருகில் உள்ள தீர்த்தக் குளம் |
| 63. | பந்தளம் | - ஐயப்பன் வளர்ந்த ஊர் |
| 64. | பம்பை | - சபரிமலை அடிவாரத்தில் ஒரு புண்ணிய நதி |
| 65. | பம்பை கணபதி கோயில் | - பம்பை நதிக்கரையிலிருந்து சபரி யாத்திரை தொடங்கும் இடத்தில் உள்ள கணபதி கோயில் |
| 66. | பாண்டித்தாவளம் | - மாளிகைபுரம் சமீபம் மருதநாட்டில் இருந்து வரும் பக்தர்கள் தங்குமிடம் |
| 67. | பிரதிஷ்டை தினம் | - வைகாசி மாதம் அஸ்த நட்சத்திரத்தில் சபரிமலை பிரதிஷ்டை செய்ததாக ஐதீகம் அன்று ஒருநாள் மட்டும் நடை திறந்து தரிசனம் கிடைக்கும் |
| 68. | புதுச்சேரி | - பெருவழியில் செல்லும் ஒரு ஆறு. |
| 69. | புத்தன் வீடு | - மகிஷியைக் கொல்ல ஐயப்பன் சென்ற பொழுது தங்கிய இடம். எரிமேலியில் உள்ளது. மகிஷியை வதம் செய்த வாள் இன்றும் புத்தன் வீட்டில் உள்ளது. |
| 70. | பூங்காவனம் | - சபரிமலைக் கோயிலும் அதனைச் சுற்றியுள்ள இடத்தையும் அழைக்கும் பெயர் |
| 71. | புலிக்குன்னில் | - தாயின் நோய்க்கு புலிப்பால் கொண்டு வரும் வழியில் ஐயப்பன் புலிகளுடன் தங்கிய மலை. |
| 72. | பூரண புஷ்கலா | - ஐயப்பனது இரு தேவியர்கள் |
| 73. | பூதநாதகீதை | - ஐயப்பன் பந்தள மன்னனுக்கு உபதேசித்த ஆன்மீகத் தத்துவங்கள் |
| 73. | பெரியானை வட்டம் | - யானைகள் தங்குமிடம் |
| 74. | பெரிய கருப்பர் | - ஐயப்பனது பாதுகாவலர் பதினெட்டம் படிக்கு அருகே இவருக்கு சன்னதி உள்ளது. |
| 75. | பெருநாடு ஐயப்பன் கோவில் | - பட்டணந்திட்டாவிலிருந்து சபரிமலை செல்லும் வழியில் மடத்துக்குழி என்ற இடத்தில் இருந்து இரண்டு கீ.மீ தொலைவில் உள்ள ஐயப்பன் கோயில் இங்கு பெண்கள் ஐயப்பனை தரிசனம் செய்யலாம். ஐயப்பனது திருவாபரணம் இங்கும் அணிவிக்கப்படுகிறது. |
| 76. | பொன்னம்பல மேடு | - தை முதல் தேதி மகர ஜோதி தெரியும் மலை |
| 78. | பேரூர் தோடு | - இரும் பொன்னிக்கரையில் உள்ள சிவன் கோயில் |
| 79. | நாயாட்டு விளி | - பதினெட்டாம்படியின் கீழ் நடத்தப்படும் சாஸ்தாவின் கதையை பாடும் ஒரு சடங்கு |
| 80. | மரக்கூட்டம் | - சபரி பீடத்திற்கு அடுத்த இடம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 81. மண்டல காலம் | - | கார்த்திகை முதல் தேதி முதல் மார்கழி 11 தேதி வரை உள்ள காலம். |
| 82. மஞ்சமாதா | - | மகிஷி ஐயப்பனால் சாபவிமோஷனம் பெற்ற பிறகு மஞ்சமாதா ஆன பெண் தெய்வம் |
| 83. மகர ஜோதி | - | ஐயப்ப தரிசனத்தின் சிகர நிகழ்ச்சி பொன்னம்பல மேடடில் தெரியும் ஜோதி |
| 84. மகர சங்கர பூஜை | - | தை முதல் தேதி சூரியன் தனுசு ராசியிலிருந்து மகர ராசிக்கு கடக்கும் நேரத்தில் நடத்தப்படும் பூஜை |
| 85. மகா காளன் பீமரூபன் | - | சாஸ்தாவின் பரிவாரங்கள் |
| 86. மாளிகைபுரம் | - | சபரிமலைக்குச் செல்லும் 50 வயதுக்கு மேற்பட்ட பெண்களை அழைக்கும் பெயர் |
| 87. முக்கால் வட்டம் | - | சீரப்பஞ்சிராவிற்கு அருகில் உள்ள கோயில் |
| 88. முக்குழி | - | அம்மன் கோயில் உள்ள இடம் |
| 89. மேல்சாந்தி | - | முக்கிய அர்ச்சகர் புறப்படா சாந்தி என்றும் இவருக்குப் பெயர் பதவி ஏற்றத்தில் இருந்து ஒரு ஆண்டுக்கு வீட்டுக்குச் செல்லாமல் சபரிமலையில் இருப்பதால் இவருக்கு இந்தப் பெயர். |
| 90. வாவர் | - | ஐயப்பனின் நண்பர் |
| 91. வலியம்பலம் | - | பெரிய கோயில் |
| 92. வலியக் கோயில் கல் | - | பந்தள ராஜா தான் வணங்குவதற்காக பந்தள அரண்மனைக்கு அடுத்து கட்டிய ஐயப்பன் கோயில் |
| 93. விரி | - | தங்குமிடம் |
| 94. விஷு | - | மலையாள வருடப்பிறப்பு |
| 94. விஷு கை நீட்டம் | - | ஆண்டு தோறும் நல்லது நடக்க அர்ச்சகர் கையால் பணம் பெறுவதாகும். |
| 95. நடை | - | சன்னிதானம் |
| 96. நெரபுத்திரி | - | அறுவடைத் திருநாள் பூஜை |
| 97. நெய் அபிஷேகம் | - | ஐயப்பனுக்குச் செய்யப்படும் முக்கிய அபிஷேகம் |
| 98. நெய் தேங்காய் | - | ஐயப்பனுக்கு அபிஷேகம் செய்வதற்கு பக்தர்கள் நெய் அடைத்துச் செல்லும் தேங்காய் |
| 99. ராஜசேகர பாண்டியன் | - | பந்தள ராஜா |
| 100. ஹோம குண்டம் | - | நெய் அபிஷேகம் செய்த பிறகு தேங்காய் மூடிகளை அர்ப்பணம் செய்யும் ஆழி. |
| 101. ஸ்ரீ பூதநாத சரிதம் | - | ஸ்ரீ கூ.மு முத்துமாமி சாஸ்திரிகள் எழுதிய ஐயப்பனைப் பற்றிய சமஸ்கிருத நூல். |
| 102. ஹரிஹராத்மஸாஷ்டகம் (ஹரிவராசனம் பாடல்) | - | அர்த்தசாம பூஜைக்கு முன் நடைசாத்தும் முன் பாடப்படும் பாடல் ஐயப்பனுக்கு பாடும் தலாட்டு என்று கூறுவார்கள். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துறவு பூண்ட ஸ்ரீ ஐயப்பனுக்கு ஆபரணம் அணிவிப்பது ஏன்?

சபரிமலையில் துறவு பூண்ட யோக நிலையில் ஐயப்பன் எழுந்தருளியிருக்கிறார் அப்படியிருந்தும் மகர விளக்கின்போது பநதள மகாராஜா அரண்மனையிலிருந்து ஆபரணங்கள் வருவதும், அதை அணிவிப்பதும் சிறப்பு பூஜை நிகழ்ச்சிகளாகும்.

துறவியான சுவாமி ஆபரணங்கள் பூண்டு காட்சி தருவதேன்? ஐயப்பன் தன் அவதார நோக்கத்தின் நிமித்தம் பந்தள நாட்டை விட்டுச் சபரிமலைக்குப் புறப்படும் போது எல்லோரிடமிருந்து தனித்தனியாக விடைபெற்றுக்கொண்டு வந்தார் அவர்களுள் பந்தள நாட்டில் அவருக்குக் குருவாக இருந்த குருவும் ஒருவர்.

அந்த குருவிடம் சுவாமி உங்களுக்கு ஒரு தட்சிணையாக நான் என்ன தர வேண்டும் என்று கேட்டார்.

குரு நெகிழ்ந்து போய் பெருமானே நீர் எனக்கு இப் பிறவியில் மணாக்கர் என்று கூறும் பேறே எனக்க குருதட்சணை என்றார். அவருடைய மனைவியே ஊமையாகவும் குருடாகவும் இருக்கும் அவர்கள் குழந்தையை குணப்படுத்தித் தரவேண்டும் என்று வேண்டினாள்.

குரு பத்தினியின் கோரிக்கைப்படி அந்தக் குழுற்தைக்குப் பிணி நீங்கச் செய்தார் ஐயப்பன்.

அப்பொழுது குரு தம்முன் நிற்பது தெய்வம் என்ற உணர்வைக் கடந்து நெகிழ்ச்சியுற்ற நிலையில் ஐயனே ! நீ தங்கமும், ரத்னமும் ஜொலிக்க மகாராஜனாய் இருக்க வேண்டும் என்று ஆசீர்வதித்துவிட்டார்.

எல்லாவற்றையும் கடந்த சுவாமிக்கு என் சுவர்ணரத்ன ஆபரங்கள் என்ற உணர்வு அந்தக் குருவுக்கு அப்பொழுது தோன்றவில்லை. எனினும் குருவின் ஆசிதானே! அது பொய்த்து விடக்கூடாதே! அதனால்தான் ஆண்டுக்கு ஒரு முறை மகர விளக்கு விழவின் போது தை 1ம் தேதி முதல் 4ம் தேதி வரை சுவாமி பந்தளராஜன் பரம்பரையினர் கொண்டு வரும் ஆயிரம் சவரனுக்கு மேற்பட்ட தங்க ரத்ன ஆபரணங்களை அணிந்து காட்சி தருகிறார் ஸ்ரீ ஐயப்பன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தானத்தில் சிறந்தது அன்னதானம்

மனித வாழ்க்கையில் எதைச் செய்யலாம் எதைச் செய்யக்கூடாது என்பதற்கு பல தர்மங்கள் சொல்லப்பட்டுள்ளது. பிரம்மச்சாரி சந்நியாசி இவர்களைவிட இல்லறம் நடத்துபவனுக்குதான் பல தர்மங்கள் செய்ய சந்தர்ப்பமும் வாய்ப்பும் உள்ளது. இவர்களிடம் தான் சிலர் பலவிதமான தர்மங்கள் கேட்டு வருவார்கள். இவர்களுக்கு பலவித தர்மங்கள் செய்து புண்ணியம் சம்பாதிக்க சந்தர்ப்பம் கிடைக்கும்.

நாம் தர்மங்கள் என் நினைக்கும் போது தன்னிடம் உள்ளதை யார் யாருக்கு என்ன வேண்டுமோ அதை மனமுவந்து கொடுப்பதாகும் எவ்வளவு கொடுக்க முடியுமோ அவ்வளவு கொடுக்கலாம். இவைகளின் பசிப்பவர்க்கு சாப்பாடு போடுவது மிகப்பெரிய தர்மமாக சொல்லப்பட்டுள்ளது. ஒருவனுக்கு பசிக்கொடுமை என்பது மிகப் பயங்கரமானது அவனுக்கு எதைக் கொடுத்தாலும் போதும் என்று சொல்லமாட்டான். ஒரு மூட்டை நியை பவுன் கொடுத்தாலும் இன்னும் இரண்டு பவுன் கொடுத்தால் இடுப்பில் சொருகிக் கொண்டு போகிறேன் என்பான்.

ஒருவனுக்கு சாப்பாடு போட்டால் வயிறு நிரம்பி விட்டால் போதும் வேண்டாம் ஐயா வேண்டாம் போடாதீர்கள் ஐயா என்று கும்பிடுவான் இது மாத்திரம் அல்ல வயிறு நிறைய சாப்பிட்டு விட்டு பசி அடங்கியவன் முகத்தைப் பாருங்கள் எத்தனை திருப்பதியோடு சந்தோஷப்படுகிறான். எப்படி வாழ்த்துகிறான் பாருங்கள் வேறு எதைக் கொடுத்தலும் இத்தனை திருப்தி அடையமாட்டார்கள்.

ஒருவரிடத்தில் உள்ளதைதானே வைத்துக் கொண்டு பிறருக்குக் கொடுக்காமல் தானே சாப்பிடுவது மற்றவர்களுக்கு தெரியாமல் ஒளித்து வைத்துக் கொண்டு அன்னம் அருந்தவும் பாவம் என்று சொல்லுகிநார்கள் அவ்வளவுதான் பூஜை தெய்வ வழிபாடு செய்தாலும் தானதர்மமம் முக்கியம் பொதுவாக அன்னதானத்தைப் போல் உயர்ந்தது எதுவுமே இல்லை.

எல்லா தானங்களிலும் மிக சிறந்தது அன்னதானமாகும். அது எல்லோரையும் மகிழ்விப்பதும் புண்ணியத்தைக் தேடிக் கொடுப்பதும் சக்தியையும் புஷ்டியையும் கொடுப்பதுமானும். மூன்று லோகங்களிலும் அன்னதானத்தைவிடச் சிறந்த தானம் கிடையாது. அன்ன தானத்திலிருந்து பிராணிகள் உற்பத்தியாகுகின்றன.

அன்னம் இல்லையேல் மரணம் அடைகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சபரிமலைக்கு இளம்பெண்கள் வரலாமா?
(நீதிமன்றம் தீர்ப்பு)

ஸ்ரீ சபரிமலை ஸ்ரீ ஐயப்பன் கோவிலுக்கு பத்து வயத்திற்கும் ஐம்பது வயதிற்கும் இடைப்பட்ட பெண்கள் வருதைத் தடைசெய்யக்கோரி கேரளா உயர்நீதிமன்றம் திருவிதாங்கூர் தேவஸ்ஷம் போர்டுக்கு உத்தரவு அனுப்பியுள்ளது. இதை நடைமுறைப்படுத்த தேவஸ்ஷம் போர்டுக்கு காவல்துறையின் உதவி உட்பட அனைத்து உதவிகளும் செய்ய நீதிமன்றம் கேரள மாநில அரசையும் கேட்டுக் கொண்டுள்ளது.

சங்கனாச்சேரியைச் சேர்ந்த திரு. எஸ். மஹேந்திரன் என்பவரால் வயதுவந்த பெண்கள் சபரிமலை வருவது சம்பந்தமாக ஒரு கடிதம் கேரள உயர்நீதி மன்றத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. பொது மக்களின் விருப்பததை கருத்திற்கொண்டு அக் கடிதத்தை ஒரு மனுவாக ஏற்று உயர் நீதிபதிகள் திரு. கே.ஸ் பலநாராயணமாரா ஆகியோர் உட்பட்ட டிவிசன் பெஞ்சு விசாரணைக்கு ஏற்றுக் கொண்டது. தற்போது நடைமுறையிலுள்ள அச்சாரங்கள், நம்பிக்கை பழக்கவழக்கங்களுக்குட்பட்டு பெண்கள் சபரிமலைக்கு வருவது சம்பந்தமான விளக்கங்கள் அதில் கேட்கப்பட்டிருந்தது.இதைத் தவிர முக்கியஸ்தர்களின் மனைவிகளுக்கும் விஷேட சலுகைகள் சபரிமலை சன்னிதானத்தில் வழங்குவதாகவும் மனுவில் குறிப்பிட்டு இருந்தார்.

திருவாங்கூர் முன்னால் தேவஸ்யம் போர்டு கமிஷனர் திருமதி. சந்திரிகா என்பவர் தனது மகன் மற்றும் தம் உறவினர்களுடன் (பெண்கள் உட்பட) சபரிமலை சந்நிதானத்திற்கு வந்து தனது பேரக்குழந்தைக்கு முதல்சோறு ஊட்டும் நிகழ்ச்சியை நடத்தியது சம்பந்தமாகவும் திரு.எஸ். மஹேந்திரன் தமது மனுவில் முக்கியமாக குறிப்பிட்டிருந்தார்.

## மாலை அணிந்த ஐயப்பன் இல்லங்களில் நமது பெண்களின் கடமைகள்

வழக்கம் போல் கார்த்திகை மாசம் நம்மை நெருங்கிவிட்டது கடந்த பல மாதங்காளக ஐயனை மறந்தவர்கள் கூட கார்திகை என்றதும் புத்துயிர் பெற்று விடுவார்கள். தங்கள் வீட்டு ஐயப்பமார்கள் சபரிமலை நினைவுபடுத்தியும் வீடு சத்தம் செய்து ஐயப்பமார்களுக்கு தேவையான எல்லா ஒத்துழைப்புகளும் முன்னமே செய்ய ஆரம்பிப்பது நமது வீட்டு பெண்கள் தான். ஐயப்பமார்கள் நல்லமுறையில் விரதம் இருப்பதற்கு அவர்கள் மலைக்கு சென்று திரும்பு வரையில் தீவிர விரதத்துடன் இருப்பதும் நமது வீட்டு பெண்கள் தான். தங்கள் வீட்டிலுள்ள பெண்கள் பரிபூரண ஒத்துழைப்பு இல்லாமல் எந்த ஐயப்பனும் நிம்மதியாக சபரிமலைக்கு சென்று வர இயலாது. மொத்தத்தில் ஐயப்பமார்களுக்கு ஐயன் தரிசனம் கிடைத்தாலும் அதன் பலன் முதலில் தங்க்ள வீடுகளிலிருக்கக்கூடிய பெண்களை சாரும் என்பதில் ஐயமில்லை இப்படி பலனடைபவர்கள் உண்மையிலே நமது வீட்டு பெண்களே ஆவார்கள்.

எந்தவிதமான சஞ்சலமில்லாமல் ஒரே மனதுடன் தங்கள் துயரங்களை ஒப்புவித்து வணங்கக்கூடிய ஒரே இந்து கோவில் ஸ்ரீ ஐயப்பன் கோவிதான் என்பதில் சந்தேகமில்லை. நமது பெண்கள் விரதம் இருந்துமாலை போட்டு சபரிமலைக்கு போக வேண்டியதில்லலை போகாமலே அதன் பலனை அடைந்துவிடலாம். சுவாமிமார்கள் தங்களின் விரத மகிமையால் நாம் நினைத்த காரியங்கள் சித்தியாவதுடன் ஐயப்பனின் கிருபாகடாஷமும் பெருமைகளும் ஒவ்வொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டும் வித்தியாசமான முன்னேற்றத்துடன் ஏற்படும் என்பதில் உன்னிப்பாக பார்த்தால் நன்றாக புரியும். இதையெல்லாம் நினைக்காமல் பெண்கள் மாலை அணிந்து சபரி மலைக்கு வருவதினால் பல இன்னல்களுக்கு ஆளாவதுடன் ஐயனின் விரதத்தின் மகிமையை நிறைவேற்ற இயலாமல் போய் விடுகிறது. ஐயப்பன் ஆலயம் பல சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு சபரிமலை பிரயாணம் செய்ய வேண்டும் என்பதை மறந்து விடாதிர்கள்.

# இந்து மதத்தின் சில விளங்கங்கள்

## விபூதி அணிவதன் சிறப்பு

விபூதி தரிப்பதால் இம்மையிற் செய்த பாவம் நீங்குவதுடன் அநேக ஜென்மங்களில் செய்த பாவங்களும் நீங்குகிறது.

கள் குடித்தல், திருடுதல், பிரம்மஹத்தியைச் செய்தல் முதலிய பாகவங்களைச் செய்தவன் விபூதியை அணிந்து ஸ்ரீ ருத்திரத்தை ஜபித்தால் சகல பாவங்களிலிருந்து நீங்குகிறான்.

கௌதமருக்கு அகலிகைக்கும் நடந்த விவாகத்தில் குழுமியிருந்த சகலதேவர்களுக்கும் அந்த அகலிகையின் பேரழகினால் மயங்கி அறிவையிழந்து மோகமதிகரித்து கலிதமானது. அந்தப் பாவபரிதாபத்தின் பொருட்டு தேவர்கள் துர்வாசரை அடைந்து விண்ணப்பித்தனர். துர்வாச முனிவர் விபூதியை அணிந்து கொள்ளும்படி கூறினார். அவ்விதமே சகல தேவர்களும் விபூதியை அணிந்து அந்தப் பாவத்திலிருந்து விடுபட்டனர் இதனை பிருஹ்ஸ்ஜா பாலத்தில் ஸ்ரீ கௌமத விவாககாலே என்று தொடங்கிச் செல்லும் வசனங்களால் கண்டு தெளிக.

விபூதி தரிப்பதனால் நோய் நீங்குகிறது. விபூதி தரிப்பதினால் பூதப்பிரேத பிசாசு முதலியவை அஞ்சி நடுங்கி அலறியோடுகின்றன. விபூதி தரிப்பதினால் நோய் நீங்குகிறர். விபூதி தரிப்பதினால் சுத்தம் ஏற்படுகிறது. மயிர், பூழு இவை அடைந்த அன்னத்தின் தோஷம் நீங்கும் பொருட்டுச் சுகத்திற்பாக விபூதி போடுகினற்னர்.

விபூதி அணிவதினால் சிவனடியார்களாக ஆகின்றோம் விபூதி அணிந்து சிவ சாயூஜ்ய பதவி அடைந்த பெரியோர்கள் எண்ணிலர். சுதாமன் என்ற வேதியனும், அவன் தம்பியும் சிவனடிகார்களாகிய பிரம்ம விஷ்ணுக்களை கடிந்து பேசினர். ஆதலால் பிரம்ம விஷ்ணுக்கள் அன்னனையும் தம்பியையும் முறையே ஊமையாகவும் முடவானாகவும் ஆக்கிட அதனை விபூதி கொண்டு ததீசி முனிவர் போக்கி நற்கதி அடைந்தார்கள்

கூன்பாண்டியனுடைய வெப்பு நோயை விபூதியினால் ஞானசம்பந்த சுவாமிகள் தீர்த்தருளினார். விபுதியை பற்றி நான்கு வேதங்களிலும் அவற்றின் விளக்கங்கள் தெளிவாக கூறப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ ஐயப்பன் வழிபாடு

இந்து மதத்தை வேறு எந்த மாத்தாலும் அழிக்கமுடியாது. பார்க்கிறதுக்கு பாரபட்ஷமாக உயர்ந்தும் மற்ற மதங்கள் நின்றாளும் அதெல்லாம் பெறும் கட்டிடங்கள்தான். இந்து சமயம் ஒன்றதான் கோபுரம் உயர்ந்திருந்தாலும் கடட்டிடம் கட்டிடந்தான் தாழ்ந்திருந்தாலும் கோபுரம் கோபுரந்தான்.

1942 இல் ஆலயப்புழையிலிந்துமுதல் முதலாக சபரிமலைக்குப் போகத் தொடங்கினேன். இன்னிக்குவரை பகவான் மலைக்கு வருகிற பாக்கியத்தைக் கொடுத்து வருகிறாரு. இந்த ஜென்மத்தில் இதுதான் எனக்குக் கிடைத்த பெரிய பாக்கியம். மனிதனுக்கு எதில் ஒரு ஆழந்தத நம்பிக்கையும் அமைதி கலந்த சந்தோஷமும் கிக்குதோ அதில் தொடர்ந்து போயிட வேண்டியதுதர்.

ஐயப்ப வழிபாடும் அப்படித்தான்

நதி மூலமும் ரிஷி மூலமும் பார்க்க முடியாது. தெய்வங்களோட தோற்றங்களும் அப்படித்தான். நமக்கு தெய்வ அருள்தான் தேவை எங்க பொறந்தது? எப்படிப் பொறந்தது? எப்படி வந்தது? இதெல்லாம் வேண்டாத ஆராய்ச்சி ஹோட்டலுக்குச் சாப்பிடப் போறோம். நாம் உட்கார்ந்து சாப்பிட இடத்தின் ஆழகும் கவர்ச்சியும்தான் நம்மை சாப்பாட்டில் ஈடுபடுத்துது. அத்தோட பசியும் சேர்ந்திருந்தா ருசியும் கூடுது. இதெல்லாம் விட்டுவிட்டு சாப்பாடு தயாரிக்கிற அடுப்படியை போய்ப பார்த்தா சாப்பிடத் தோணாது.

இறை அருள் என்ற உணவின் சுவைக்கு மனப்பசிதான் ரொம்ப முக்கியம்

எம். என். நம்பியார் (குருசாமி)
தமிழ்நாடு,
இந்தியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிந்துகொள்வோம்

## பவிந்திரம் (தெற்பை) அணிவனது ஏன் அதை எவ்வாறு அணிய வேண்டும்

பவிந்திரம் (தெற்பை) தரிப்பது கிரியை செய்கின்ற நேரத்தில் வேறு சிந்தனை விடுத்து மனத்தை தெய்வ வழிபாட்டில் ஈடுபட பத்திரப்படுத்துவது. இது வலது கை மோதிர விரலில் அணியப்படுவது ஏனெனில் உடலில் இருக்கின்ற நரம்புகள் அனைத்தின்னுடைய தொடர்பும் இவ் விரலில் பிரம்ம முடிச்சாக சேர்ந்திருப்பதால் இதில் தருப்பை இடுகின்ற பொருட்டு உடலில் முழுப்பகுதியும் சுத்தமாக்கப்படுகிறது. சகல பகுதிகளிலும் இணைந்து பலன் ஏற்படுகின்றது.

வலது கை இடது கை யை விட தூய்மையானது அத்துடன் காரண ஆகமத்தில் பவித்திர ஹஸ்தேனகுருயாத் அர்ச்சன கார்யம் எந்தக்கையால் விபூதி வாங்குகிறார்களோ அந்தக்ககையில் பவித்திர்ம் போடவேண்டும் பெண்களும் வலதுகையால் உபசாரம் செய்வார்கள் தர்ப்பை அணிந்த கையால் உபசாரம் செய்ய வேண்டும் என்றால் பெண்கள் இடது கையில் அணிந்து உபசாரம் செய்யலாமா அது அபசாரம் எமது முன்னோரில் சிலர் பெண்கள் என்றால் இடது பக்கம் என நினைத்து தர்ப்பை போடும்போது இடது கையில் கொடுத்துப் பழக்கி விட்டார்கள் உண்மையில் தம்பதிகளில் தலைவன் மட்டும் தர்ப்பை அணியும் மரபும் உண்டு எனவே இடது பக்கம் பெண்ணுக்கு உரியது என்றாலும் பவித்திரத் பவித்திர ஹஸ்தம் என்று சொல்லப்படும்.

வலதுகையில் அணியப்பழகவும் பவித்திரம் (தெற்பை) தரிப்பது கிரியை செய்கின்ற நேரத்தில் வேறு சிந்தனை விடுத்து மனதை தெய்வ வழிபாட்டில் ஈடுபட பத்திரப்படுத்துவது.

இது வலது கை மோதிர விரலில் அணியப்படுவது ஏனெனில் உடலில் இருக்கின்ற நரம்புகள் அனைத்தின்னுடைய தொடர்பும் இவ் விரலில் பிரம்ம முடிச்சாக சேரந்திருப்பதால் இதில் தருப்பை இடுகின்ற பொருட்டு உடலில் முழுப்பகுதியும் சுத்தமாக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்கள் வீட்டு பூஜை அறை எப்படி அமைக்க வேண்டும்

மனத்திற்கு நிம்மதியை தருவது ஆண்டவன் சன்னிதி அது போலவே ஒரு விட்டில் உள்ள பூஜை அறையும் அது எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு சில முக்கிய குறிப்புகள் வருமாறு.

ஒரு வீட்டில் பூஜை அறை வட கிழக்கில் அல்லது வடக்கில் அல்லது கிழக்கில் அமைக்கப்பட வேண்டும் பெரிய வீடாக இருந்தால் வீட்டின் மையப்பகுதியில் பூஜை அறை அமைக்கலாம்.

ஒரு பெரிய வீட்டில் இரண்டு தளங்கள் இருந்து எல்லோரும் அந்த வீட்டிவ் ஒரு குடும்பமாக வசித்தால் அவற்றில் தரை தளத்தில் பூஜை அறை இருக்க வேண்டும்.

பூஜை அறையில் கடவுளின் படம் அல்லது உருவம் கிழக்கு திசை பார்த்து இருக்கவேண்டும் அதாவது நாம் வணக்கும் போது கடவுளின் படங்கள் கிழக்கு பார்த்து இருக்க வேண்டும். மேற்கு நோக்கியும் இருக்கலாம் பூஜை அறையில் வழிபடும் பகுதியில் வட கிழக்கு மூலையில் ஒரு பித்தளை சொம்பில் அல்லது டம்ப்ளரில் நீர் பிடித்து வைக்க வேண்டும் இந்த நீரை தினமும் மாற்ற வேண்டும்.

தென் கிழக்கு மூலையில் குத்து விளக்கை வைத்து விளக்கேற்ற வேண்டும்

முக்கியமாக கவனிக்க வேண்டியது பூஜை அறையில் இறந்து போன முன்னோர்களின் புகைப் படங்களை வைக்கக் கூடாது.

பூஜை அறையை குப்பைகள் இன்றி சுத்தமாக வைத்திருக்க வேண்டும் பூஜை அறை சுவர்களின் வண்ணம் வெள்ளை அல்லது இள மஞ்சள் அல்லது நீல நிறத்தில் இருக்க வேண்டும் பூஜை அறையை வழிபடுவதற்கு தியானம் செய்வதற்கு மட்டும் பயன் படுத்த வேண்டும்.

சில வீடுகளில் இடப் பற்றாக்குறை காரணமாக படுக்கை அறை அல்லது சமையல் அறை சுவர்களில் உள்ள அலமாரிகளை பூஜை அறையாக பயன்படுத்துவதுண்டு அப்படி இருந்தால் வழிப்படும் நேரம் தவிர அந்நத அலமாரியை மூடி வைக்க வேண்டும் அதாவது கதவு இருந்தால் அதை அடைத்து வைக்க வேண்டும் அப்படி இல்லா விட்டால் துணித்திரை கொண்டு மூடி வைக்க வேண்டும் சில சமயங்களில் கதவு உள்ள மர பெட்டிகளில் கடவுள் படங்களை வைத்து வழிபடுவது உண்டு இதை சமையல் அறையின் வட கிழக்கு மூலையில் வைக்கலாம்.

கழிப்பறையின் சுவர்களில் உள்ள அலமாரிகளில் மேற்கண்டவாறு பூஜை அறை அமைக்கக் கூடாது அதை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும்.

பூஜை அறைக்கு இரண்டு கதவுகள் இருக்க வேண்டும் அவை வெளிப்புறமாக திறக்கும்படி இருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பூஜை அறை மாடிப்படிகளின் கீழ் அமைந்து இருக்கக் கூடாது பூஜை அறையில் மந்திர உச்சாடனங்களை தினமும் ஒன்றிரண்டு தடவை ஒலிபரப்பாகும்படி செய்ய வேண்டும். அல்லது நாமும் வாய்விட்டு உச்சாடனம் செய்யலாம் இது வீட்டில் நேர்மறை எண்ணங்களை கொண்டு வரும்.

அனைத்தையும் விட பூஜை அறையில் மனதை ஒருமுகப்படுத்தி தீர்க்கமாக நமது பிரார்த்தகையை கடவுளிடம் முன்வைக்க வேண்டும் அது ஒரு நிமிடம் நீடித்தாலும் கூட போதுமானது.

**சிந்திப்போம், பெண்கள் திருமாங்கல்யத்தை தங்கச் சங்கிலியில் அணிவது சரியா?**

இல்லறம் அல்லது நல்லறம் அன்று என்பது அவ்வை வாக்கு திருமணத்தை ஆயிரம் காலத்துப்பயிர் என்றனர் திருமாணத்தில் சடங்கு சம்பிரதாயங்கள் எத்தனையோ இடம் பெற்றாலும் மணமகளுக்கு மணமகன் தாலி கட்டுவது தான் ஹைலைட்

மாங்க தாரணம் என்று இதைக் குறிப்பிடுவர். இவ்வாறு திருமணத்தில் திருமாங்கல்யம் அணிவிக்கும் போது மாங்கல்ய தந்துனானேன என்ற மந்திரம் சொல்லுவார்கள். தந்து என்றால் கயிறு தான் என குறிப்பிடப்படுகிறது.

மஞ்சள் சரடில் தாலி இருந்தால் தான் மங்களம் வறுமையில் வாடும் பெண்கள் கூட தங்கத்தாலியை அடகு வைத்து விட்டு மஞ்சள் கயிறில் மஞ்சள் கிழங்கை கட்டி தாலியாக அணிந்து கொள்வார்கள் ஆக தாலி என்பது மஞ்சள் சரடில் தான் இணைந்து இருக்க வேண்டும்.

கன்னா பின்னாவென்று அழகு சாதனப் பொருட்களை உபயோகிக்கும் இந்தக் காலத்தில் மஞ்சள் கயிறு அணிவதால் அலர்ஜி ஏற்படுகிறது என்று கூட சில பெண்கள் கூறுவது இதென்ன கலாச்சார சீரழிவு என்ற வருத்தத்தை ஏற்படுத்துகிறது.

தரமான மஞ்சள் சரடில் தாலியை அணிந்தால் அலர்ஜி எல்லாம் வராது இன்றும் கூட மிகப்பெரும் பணக்காரர்கள் கழுத்தில் மஞ்சள் சரடில் தான் தாலியை அணிகிறார்கள்.

கழுத்தில் எத்தனை வகையான நகைகள் அணிந்தாலும், மஞ்சள் சரடினால் ஆன தாலியை அணிந்தால் அதன் மகத்துவம் தனிதான் இதைத்தான் இறைவனும் விரும்புவான் கணவருக்கும் ஆயுள் நீடிக்கும் என்கின்றனர் மகான்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அறுபத்து மூன்று அடியார்களில் மூவர் பெண்கள் என்பது மேலும் சிறப்பு அதிலும் காரைக்கால் அம்மையார் இயற்றியுள்ள பாடல்கள் சைவத்தில் தனித்துவமானவை**

**அறுபத்துமூவர்களாவர்**

01. அதிபத்தர்
02. அப்பூதியடிகள்
03. அமர்நீதியார்
04. அரிவட்டாயர்
05. ஆனாயர்
06. இசைஞானியர்
07. இடங்கழியார்
08. இயற்பகையார்
09. இளையான்குடி மாறன்
10. உருத்திரபசுபதியார்
11. எறிபத்தர்
12. ஏயர்கோன்கலிக்காமர்
13. ஏனாதி நாதர்
14. ஐயடிகள் காடவர் கோன்
15. கணநாதர்
16. கணம் புல்லர்
17. கண்ணப்பர்
18. கலிக்காம்பர்
19. கலியர
20. கழறிற்றறிவார்
21. கழட்சிங்கர்
22. காரியார்
23. குங்கிலியக்கலயர்
24. காரைக்கால்
25. குலச்சிறையர்
26. கூற்றுவார்
27. கோச்செங்கட்சோழர்
28. போட்புலியார்
29. சடையனார்
30. சன்டேஸ்வர்
31. சந்தியார்
32. காக்கியர்
33. சிறுப்புலியார்
34. சிறுத்தொண்டர்
35. சுந்தரர்
36. செருத்துணையார்
37. சோமாசிமாறர்
38. தண்டியடிகள்
39. திருக்குறிப்பத்தொண்டர்
40. திருஞானசம்பந்தர்
41. திருநாவுக்கரசர்
42. திருநாளைபோவார்
43. திருநீலநக்கர்
44. திருநீலகண்டயாழ்பாணர்
45. திருநீலநக்கர்
46. திருமூலர்
47. நமிநந்தியடிகள்
48. நரசிங்க முளையாரையர்
49. நின்றசீரடநெடுமாறர்
50. நேசர்
51. புகழ்ச்சோழர்
52. புகழ்த்துனையார்
53. பூசலார்
54. பெருமிழவக்குரும்பர்
55. மங்கயற்கரசியார்
56. மானககஞ்சாறர்
57. முருகர்
58. முனையடவார்
59. மூர்க்கர்
60. மூர்த்தியார்
61. மெய்ப்பொருளார்
62. வாயிலார்
63. விறணமிண்டர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதினாறு பேறுகள்

பெரியவர்கள் வாழத்தும் போது 16ம் பெற்று பெருவாழ்வு வாழ்க என வாழ்த்துவார்கள். இது கீழ்கண்ட 16 வகையான செல்வங்களைக் குறிக்கும் சோடக லட்சுமி என்ற மகாலக்ஷ்மி தேவி நமக்கு பதினாறு ரூபங்களில் காட்சி தருபவள்.பெரியோர்கள் நம்மை வாழ்த்தும் போது பதினாறும் பெற்று பெரு வாழ்வு வாழ்க என்று வாழ்தது்வர் அந்த 16 என்ன என்று தெரிந்து கொள்ளுங்கள் நமது வாழ்வியல் தர்மமான வேதமே இதை எடுத்துரைக்கிறது.

01. வாழ்க்கையில் நமக்கு வழிகாட்டக்கூடிய கல்வி
02. நீண்ட ஆயுள்
03. நம்பிக்கைக்கு உரிய நண்பர்கள்
04. வாழ்க்கைக்கு தேவையான செல்வம்
05. உழைப்புக்கு தேவையான ஊதியம்
06. நோயற்ற வாழ்க்கை
07. எதற்கும் கலங்காத மனவலிமை
08. அன்புள்ள கணவன் மனைவி
09. அறிவு ஒழுக்கம் ஆற்றல் கொண்ட குழந்தைகள்
10. மேன்மேலும் வளரக்கூடிய புகழ்
11. மாறாத வார்த்தை
12. தடங்கலில்லாத வாழ்க்கை
13. வருவாயைச்சிக்கனமாக செலவழித்து செமிப்பு அதிகரித்தல்
14. திறமையான குடும்ப நிர்வாகம்
15. நமக்கு உதவக்கூடிய பெருமக்களின் தொடர்வு
16. பிற உயிர்களிடம் அன்பு செலுத்துதல்

இந்த பதினாறும் பெற்று வாழ்ந்தாலே பெருவாழ்வு வாழ முடியும் என்று நம் முன்னோர்கள் கூறுகின்றனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கும்பாபிஷேகம் செய்தவன் பொருள் என்ன?

கும்பாபிஷேகம் செய்யும்போது கும்பத்தீர்த்தத்தில் இறைவனை ஆவாகனம் செய்து யாகத்தின் மூலம் மந்திரம் ஜெபித்து சக்தியை உருவேற்றி அந்தக் கும்பத் தீர்த்தத்தை இறை பிம்பத்திலும் கோபுர கலசங்களிலும் அபிஷேகம் செய்வர்

கடவுளின் உடலாக் கும்பத்தையும் அதன்மேல் சுற்றப்பட்ட நூல் 72,000 நாடி நரம்புகளையும் உள்ளே ஊற்றப்பட்ட நீர் ரத்தமாகவும் அதனுள் போடப்பட்ட தங்கம் ஜீவனாகவும் மேலே வைக்கப்பட்ட தேங்காய் தலையாகவும் கும்பத்தின் கீழ்பரப்பட்பட்ட தானியம் ஆசனமாகவும் பாவித்து வஸ்திரம் சந்தனம் பூக்கள் ஆகியவற்றை கொண்டு அலங்காரம் செய்து யாக மேடையில் அமைப்பது வழக்கமாகும். சாதாரண கும்பமானது மந்திர சக்தியால் உயர்கலசமாக மாறுகிறது. கும்பாபிஷேகத்தால் ஆலயத்தின் இறைசக்தி பன்மடங்கு பெருகுகிறது.

கும்பாபிஷேகம் ஆவர்த்தம் அனுவர்த்தம் புனஸ்வர்தம் அந்தரிதம் என நான்கு வகைப்படும்.

01. தெய்வ மூர்த்தங்களையும் கோவிலையும் புதிதாக அமைத்து நிரமாணம் செய்வது ஆவரத்தம் எனப்படும்

02. கோவிலோ தெய்வ மூர்த்தங்களோ வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்டால் அவற்றை மறுபடி அமைப்பது அனுவர்ததம் என்று சொல்லப்படும்.

03. ஆலயம் பழுதடைந்துவிட்டால் அதற்கு அஷ்டபந்தன மருந்து சாற்றி மீண்டும் புதுப்பித்து புனஸ்வர்த்தம் ஆகும்.

04. கள்வர்களால் அபகரிக்கப்பட்ட மூர்த்திகளை மீண்டும் பிரதிஷ்டை செய்வது அந்தரிதம் என சொல்லப்படும்.
இறைவன் எம்மால் அறியப்பட்ட முடியாதவாறு ஊர், பேர், உருவம் குணம்குறிகள் இல்லாதவராக இருந்தாலம் ஆன்மாக்களின் மீது கொண்ட அன்பினால் உருவங்களாகக் காடசியளிக்கின்றார் இறைவனது திருவுருவங்கள் சாதாரணமாகக் கருணை வடிவானவையே இருப்பினும் தவறிழைக்கின்ற தீயவர்களை நல்வழிப்படுத்துவதற்காக எடுக்கப்படும் தோற்றங்கள் தான் சற்று பயங்கரமாகத் தோற்றமளிக்கின்றன.

05. இறைவன் கருணை உள்ளங் கெண்டவரெனும் பொழுது சிவபெருமான் தனது காலுக்கடியில் ஒருவரை மிதிப்பது போன்ற நிலை எதற்கான?

இறைவன் எப்பொழுதுதே கருணையுளளங்கொண்டவர்தான் இருப்பினும் அதர்மத்தை அழித்து தர்மத்மை நிலைநாட்டுவதனையே அவர்கொண்ட உக்கிர தோற்றங்கள் வெளிப்படுத்துகின்றன. சிவபெருமானின் காலுக்கடியிலே இருப்பவரின் பெயர் முயலகன் என்பதைகும் சிவபெருமானிடத்திலே கோபங்கொண்ட தாருகா வனத்து ரிசிகள் வேள்வியொன்றை நிகழ்த்தி அதன் மூலமாக முயலகனையும் பாம்புகள் மிருகங்களையும் தோற்றுவித்து சிவபெருமானைத் தாக்கி அழிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணம் ஏவினார்கள். இதையுணர்ந்த சிவபெருமான் தன்மீது ஏவப்பட்ட மிருகங்களில் மானையும் மழுவையும் தனது இரு கரங்களிலும் தாங்கிக் கொண்டாரென்றும் பாம்புகளைத் தனக்கு அணிகலன்களாக்கிக் கொண்டாரென்றும் சிங்கத்தையும் யானையையும் கொன்று அவற்றின தோல்களை
தனது ஆடைகளாக்கிக் கொண்டாரென்றும் முயலகனை தனது காலின் கீழ் வைத்துக் கொண்டாரென்றும் ஆகம விளக்கம் கூறுகின்றது.

06. சில கோவில்களிலே கர்ப்பக்கிரகத்தின் புறச்சுவர்களில் விக்கிரகங்கள் அழைக்கப்பட்டிருக்கின்றதே?

ஆம் கர்ப்பக்கிரகத்தின் புறச்சுவர்களிலே அமைக்கப்பட்டிருக்கின்ற விக்கழரகங்களிலே தெற்கு நோக்கியிருப்பவர் தட்சிணாமூர்தியாகுரம். இவை யோக தட்சிணாமூர்த்தி வீணா தடசிணாமூர்த்தி ஞான தட்சிணாமூரத்தி வியாக்கியான தடச்சிணாமூர்த்தி என்று நான்கு வகையாகக் கூறப்பட்டாலும் பெரும்பாலும் கோவில்களில் வியாக்கியான தட்சிணாமூர்தியையே காணக்கூடியதாகவுள்ளது. அடுத்த சிவாலயங்களின் பின்புறச் சுவரிலே இருப்பவர் இலிங் கோற்பவர் திருமாலம் பிரம்மனும் சிவபெருமானின் அடிமுடி தேடிச் சென்றதனைக் கூறுகின்ற வடிவம்தான் இலிங்கோற்பவ மூர்தியாகும் அடுத்த வடக்குப்புறச்சுவரிலே பிரம்மன் துர்கை போன்றவர்களுக்கு இடமுண்டு.

## ஆலயத்தில் செய்யத்தாகதவை

01. பிறருடைய அன்னத்தை புசித்த தினத்தில் இறைவனை ஆலயத்தில் வந்து தரிசிப்பது.
02. பிறர் பொருளைக்கொண்டு சுவாமிக்கு நைவேத்யம் செய்வது
03. வீட்டில் செய்துவரும் நித்திய பூஜையை நிறுத்திவிட்டு ஆலயம் செல்வது
04. ஒருவரைக் கெடுப்பதற்காக சுவாமியை வேண்டிக்கொள்வது
05. தம்பதிகளின் உடலுறுக்குப்பின் ஸ்நானம் செய்யாமல் ஆலயம் ப்ரவேசிப்பது
06. ஸ்த்ரீகள் ரஜஸ்வலையாகக்கூடிய நாட்களைக் கணக்கிடட்டு கருத்தில் கொள்ளாது அந்நாட்களில் ஆலயம் செல்லுதல்
07. மாதவிடாயப் பெண்களுடன் பேசிக் கொண்டு இருந்தவாரோ அருகில் சென்றாவரோ ஸ்நானம் செய்யாமல் ஆலயம் செல்வது
08. மரணத்தினால் தீட்டு உள்ளவர்கள் ஆலயம் செல்வது
09. பிணத்தைப் பாரத்தவர்கள், பிணத்தோடு உடன் சென்றவர், மரணத்தினால் தீட்டு உள்ளவர்களைத் தீண்டியவர்கள் ஆகியோர் ஸ்நானம் செய்யாமல் அலயம் செல்வது
10. மலஜலங்களை அடக்கிக் கொண்டு ஆலயம் செல்லுதல்
11. தொலைபேசி பேசுவதை தவிர்த்தல்
12. கருப்பு வஸ்திரம் தரித்துக் கோயிலுக்குச் செல்லுதல் பூஜை செய்தல்
13. கோபத்துடன் ஆலயம் செல்லுதல் பூஜை செய்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. துவஸஜ்தம்பமும் பலிபீடமும் கடந்து உள்ளே சென்றபிறகு எங்கேயாவது கீழே விழுந்து நமஸ்காரம் செய்தல்

15. பகவானுக்கும் நந்திக்கும் இடையே குறுக்காக நடத்தல் அல்லது பிரதட்ஷணம் செய்தல்

16. ஈர வஸ்திரங்களேயோ விழுப்பு வஸ்திரங்களையோ அணிந்து ஆலயம் செல்லுதல்

17. சாப்பிட்டுவிட்டுக் கோயிலுக்கு வழிபாட்டிங்காகச் செல்லுதல்

18. இடுகாடு அல்லது சுடுகாடு சென்று வந்த நாட்களில் ஆலயம் செல்லுதல்

19. புலாலோ உண்ட நாட்களில் திருக்கோயில் செல்லுதல்

20. கால் அலம்பாமல் ஆலயத்திற்குள் அடியெடுத்து வைத்தல்

21. மூர்த்திகளைத் தொடுதல்

22. மூர்த்திகளின் அருகில் கற்பூரம் ஏற்றுதல் அல்லது தீபம் ஏற்றுதல்

23. கோயில் உள்ளே தீபத்தினை விரலால் தூண்டுதல் கைகளைச் சுவரிலும் மற்றுள்ள இடங்களிலும் துடைத்தல்

24. எச்சில் துப்புதல்

25. நைவேத்யம் ஆகும்போது பார்த்தல்

26. சிவ நிர்மால்யங்களை மதித்தல் அல்லது தாண்டுதல்

27. விமானம் த்வஜஸ்தம்பம் பலிபீடம் விக்ரஹம் ஆகியவற்றின் நிழலை மிதித்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாஸ்திரங்கள்

பெண்கள் கடைபிடிக்க வேண்டியவைகள் என சில நியமனங்களை நமது சாஸ்திரங்கள் கூறியுள்ளன இவை அனைத்துமே குடும்ப நலன் கருதி கூறப்பட்ட விஷயங்கள் தான்

* சுமங்கலி பெண்கள் குங்குமம் இல்லாமல் இருக்ககூடாது
* பெண்கள் இரண்டு கைகளாலும் தலையை சொறியக்கூடாது
* அடிக்கடி வீட்டில் அழக்கூடாது இதுவே பீடையை ஏற்படுத்தும்
* வீட்டிற்கு சுமங்கலி பெண்கள் வரும்போதும் அவர்களுக்கு வெற்றிலை பாக்கு, பழம், புஷ்பம் போன்றவற்றை கொடுத்து உபசரிக்க வேண்டும்.
* பூசணிக்காயை பெண்கள் உடைக்கக்கூடாது
* கர்ப்பணி பெண்கள் தேங்காயை உடைக்கக்கூடாது தேங்காய் உடைக்கும் இடத்திலும் அவர்கள் இருக்கக்கூடாது
* கர்ப்பமாக இருக்கும் போது எலுமிச்சை பழத்தை அறுத்து விளக்கேற்றக்கூடதாது
* வேலைக்காரர்களை வைத்து கோலமிடக்கூடாது அந்த வீட்டின் பெண்ணே இந்த வேலையை செய்தால் லட்சுமி கடாட்சம் அதிகரிக்கும்
* கைகளால் அன்னதைத்தையோ காய்கறிகளையோ பரிமாறக்கூடாது
* பிரதோஷ காலத்தில் அதாவது மாலை 6 மணியவில் பெண்கள் விடுட்டில் படுத்திருக்ககூடாது
* அம்மி உரல் மீது அமரக்கூடாது வீட்டு வாசற்படியை மிதிக்கக் கூடாது
* பெண்கள் கையில் வளையல் அணியாமலும் தலையை விரித்துப் போட்டும் விளக்கேற்றக் கூடாது
* கோயில் மற்றும் பெரியவர்கள் முன்பு பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரம் செய்ய வேண்டும் பஞ்சாங்கம் என்பது தலை கையிரண்டு முழந்தாளிரண்டு என்னும் ஐந்தும் நிலத்தில் பொருந்தும்படி வணங்குவதாம் இதை மூன்று ஐந்து அல்லது ஏழு முறை என ஒற்றைப்படைமயில் செய்ய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குரு துதி

குரு ப்ரஹ்தா ஒரு விஷ்ணு
குரு தேவா மஹேஸ்வரக
குரு ஸாச்சாத் பரப்பிரஹ்மா
தஸ்மை ஸ்ரீ குருவே நமஹ

ஓம் ஸ்ரீ கன்னிமூல கணபதி பகவானே சரணம் ஐயப்பா

## விநாயகர் துதி

மூசிக வாகன மோதக ஹஸ்த
ஸாமர கர்ண விளம்பித ஸீத்ர
வாமனரூப மஹோஸ்வர புத்ர
விக்னவிநாயன பாதநமஸ்தே

ஓம் ஸ்ரீ கன்னிமூல கணபதி பகவானே சரணம் ஐயப்பா

## அருள்மிகு ஸ்ரீ ஐயப்பன் நூற்றெட்டு சரணக்கோவை

| | | |
|---|---|---|
| ஓம் | கன்னிமூல கணபதி பகவானே | சரணம் ஐயப்பா |
| ஓம் | காந்தமலை ஜோதியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஹரிஹர சுதனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | அன்னதான பிரபுவே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஆறுமுகன் சோதரனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஆபத்தில் காப்போனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | இன்தமிழிச் சுவையே | சரணம் ஐயப்பா |
| ஓம் | இச்சை தவிர்பபவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஈசனின் திருமகனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஈடில்லாதத் தெய்வமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | உண்மைப்பரம் பொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் | உலகாளும் காவலனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஊமைக்கருள் புரிந்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஊழ்வினை அழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | எளியோர்க்கு அருள்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | எங்கள் குலதெய்வமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஏழைப் பங்காளனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஏகாந்த மூர்த்தியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஐங்கரன் தம்பியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஐயமெல்லாம் தீர்ப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஒப்பில்லாத் திருமணியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஒளிரும் திருவிளக்கே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஓங்காரப் பரம்பொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஓதும் மறைபொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஔடதங்கள் அருள்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சௌபாக்கியம் அளிப்பவனே | சரணம் ஐயப்பா |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| ஓம் கலியுக வரதனே | சரணம் ஐயப்பா |
| ஓம் சபரிமலை சாஸ்தாவே | சரணம் ஐயப்பா |
| ஓம் சிவன் மால் திருமகனே | சரணம் ஐயப்பா |
| ஓம் சிவவைணவ ஐக்கியமே | சரணம் ஐயப்பா |
| ஓம் அச்சங் கோயில் அரசே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஆரியங்காவு ஐயாவே | சரணம் ஐயப்பா |
| ஓம் குளத்துப் புழைப்பாலனே | சரணம் ஐயப்பா |
| ஓம் பொன்னம்பல வாசனே | சரணம் ஐயப்பா |
| ஓம் வில்லாளி வீரனே | சரணம் ஐயப்பா |
| ஓம் வீரமணி கண்டனே | சரணம் ஐயப்பா |
| ஓம் உத்திரத்தில் உதித்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் பம்பையிலே பிறந்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் பந்தள மாமணியே | சரணம் ஐயப்பா |
| ஓம் சகலகலை வல்லோனே | சரணம் ஐயப்பா |
| ஓம் சாந்தம் நிறை மெய்பொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் குருமகனின் குறைதீர்த்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் குருதட்சணை அளித்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் புலிப்பாலை கொணர்ந்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் வன்புலியின் வாகனனே | சரணம் ஐயப்பா |
| ஓம் தாயின் நோய் தீர்த்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் குருவின் குருவே | சரணம் ஐயப்பா |
| ஓம் வாபரின் தோழனே | சரணம் ஐயப்பா |
| ஓம் துளசிமலை மார்பனே | சரணம் ஐயப்பா |
| ஓம் தூயவுள்ளம் அளிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் இருமுடிப்பிரியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் எரிமேலி சாஸ்தாவே | சரணம் ஐயப்பா |
| ஓம் நித்திய பிரம்மச்சாரியே | சரணம் ஐயப்பா |
| ஓம் நீலவஸ்திர தாரியே | சரணம் ஐயப்பா |
| ஓம் பேட்டை துள்ளும் பேரருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் பெரும் ஆணவத்தை அழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் சாஸ்தாவின் நந்தவனமே | சரணம் ஐயப்பா |
| ஓம் சாந்தி தரும் பேரழகே | சரணம் ஐயப்பா |
| ஓம் பேரூத்தோடு தரிசனமே | சரணம் ஐயப்பா |
| ஓம் பேதமையை ஒழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் காளை காட்டி நிலையமே | சரணம் ஐயப்பா |
| ஓம் அதிர்வேட்டுப் பிரியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் அழுதமலை ஏற்றமே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஆனந்தமிகு பஜனைப் பிரியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் கல்லிடும் குன்றே | சரணம் ஐயப்பா |
| ஓம் உடும்பாறைக் கோட்டையே | சரணம் ஐயப்பா |
| ஓம் இஞ்சிப் பாறைக் கோட்டையே | சரணம் ஐயப்பா |
| ஓம் கரியிலந் தோடே | சரணம் ஐயப்பா |
| ஓம் கரிமலையேற்றமே | சரணம் ஐயப்பா |
| ஓம் கரிமலை இறக்கமே | சரணம் ஐயப்பா |
| ஓம் பெரியானை வட்டமே | சரணம் ஐயப்பா |
| ஓம் சிறியானை வட்டமே | சரணம் ஐயப்பா |
| ஓம் பம்பா நதி தீர்த்தமே | சரணம் ஐயப்பா |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| ஓம் பாவமெல்லாம் அழிபபவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் திருவேணி சங்கமமே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஸ்ரீ இராமர் பாதமே | சரணம் ஐயப்பா |
| ஓம் சக்தி பூஜைக் கொண்டவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் சபரிக்கு அருள் செய்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் தீப ஜோதித் திரு ஒளியே | சரணம் ஐயப்பா |
| ஓம் தீராத நோய் தீரப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் பம்பா விளக்கே | சரணம் ஐயப்பா |
| ஓம் பழவினைகள் ஒழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் தென்புலத்தார் வழிபாடே | சரணம் ஐயப்பா |
| ஓம் திருபம்பையின் புண்ணியமே | சரணம் ஐயப்பா |
| ஓம் நீலிமலை ஏற்றமே | சரணம் ஐயப்பா |
| ஓம் நிறைவுள்ளம் தருபவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் அப்பாச்சி மேடே | சரணம் ஐயப்பா |
| ஓம் இப்பாச்சிக் குழியே | சரணம் ஐயப்பா |
| ஓம் சபரிபீடமே | சரணம் ஐயப்பா |
| ஓம் சரக்குத்தி ஆலே | சரணம் ஐயப்பா |
| ஓம் உரல்குழி தீர்த்தமே | சரணம் ஐயப்பா |
| ஓம் கருப்பண்ண சுவாமியே | சரணம் ஐயப்பா |
| ஓம் கடுத்த சுவாமியே | சரணம் ஐயப்பா |
| ஓம் பதினெட்டாம் படியே | சரணம் ஐயப்பா |
| ஓம் கனவானின் சந்நிதியே | சரணம் ஐயப்பா |
| ஓம் பரவச பேருணர்வே | சரணம் ஐயப்பா |
| ஓம் பசுவின் நெய் அபிஷேகமே | சரணம் ஐயப்பா |
| ஓம் நாகராசாப் பிரபுவே | சரணம் ஐயப்பா |
| ஓம் மாளிகைப் புறத்தம்மனே | சரணம் ஐயப்பா |
| ஓம் மஞ்சமாத திருவளே | சரணம் ஐயப்பா |
| ஓம் அக்கினிக் குண்டமே | சரணம் ஐயப்பா |
| ஓம் அலங்காரப் பிரியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் பஸ்மக் குலமே | சரணம் ஐயப்பா |
| ஓம் சற்குரு நாதனே | சரணம் ஐயப்பா |
| ஓம் மகர ஜோதியே | சரணம் ஐயப்பா |
| ஓம் மங்கள மூர்த்தியே | சரணம் ஐயப்பா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ஐயப்பன் கவசம்

## காப்பு

அரிஹர புத்ரனை ஆனந்த ரூபனை
இருமூர்த்தி மைந்தனை ஆறுமுகன் தம்பியை
சபரிகிரீசனை சாந்த சொரூபனை
தினம் தினம் போற்றி பணிந்திடுவோமே

ஐயப்ப தேவன் கவசமிதனை
அனுதினம் சொல்ல அல்லல்கள் ஒழியும்
தினம் தினம் துதிக்கத்தீரும் வினையெல்லாம்
நாடிய பொருளும் நலமும் வருமே.

## நூல்

மண்ணுலகெல்லாம் காத்தருள் செய்ய
மணிகண்ட தேவா வருக வருக
மாயோன் மைந்தா வருக வருக
ஐங்கரன் சோதரா ஐயப்பா வருக

புலிவாகனனே வருக வருக
புவியெல்லாம் காத்திட வருக வருக
பூரணை நாதனே வருக வருக
புண்ணிய மூர்த்தியே வருக வருக

பூத நாயகா வருக வருக
புஸ்களை பதியே வருக வருக
பொன்னம்பலத்துறை ஈசா வருக
அடியாரைக் காக்க அன்புடன் வருக

வருக வருக வாசகன் மைந்தா
வருக வருக விரமணிகண்டா
வஞ்சனை நீக்கிட வருக வருக
வல்வினை போக்கிட வருக வருக

ஐயம் தவிர்த்திட ஐயப்பா வருக
அச்சம் அகற்றிட அன்பனே வருக
இருவினை களைந்தே எனையாட்கொள்ள
இருமூர்த்தி மைந்தா வருக வருக

பதினெண்படியை மனதில் நினைக்க
பண்ணியபாவம் பொடிப் பொடியாகும்
ஐயப்பா சரணம் என்றே கூறிட
ஐம்பூதங்களும் அடி பணிந்திடுமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபரி கிரீசனை நினைத்து நீறிட
துண்பங்கள் எல்லாம் தூள் துளாகும்
சரணம் சரணம் என்றே சொல்லிட
சித்திகள் யாவும் வந்தடைந்திடுமே

பம்பயின் பாலன் பெயர் சொல்லிடவும்
பகைவர் களெல்லாம் பணிந்தே வணங்குவர்
ஐயப்பன் பாதம் அனுதினம் நினைக்
அவனியிலுள்ளோர் அடிபணிந்தேத்துவார்

சரணம் சரணம் ஐயப்பா சரணம்
சரணம் சரணம் சபரி கிரீசா
சரணம் சரணம் சற்குரு நாதா
சரணம் சரணம் ஸ்வாமியே சரணம்

## வேண்டுதல்

சிவனார் மகன் எள் சிரசினைக் காக்க
நெடுமால் மைந்தன் நெற்றியைக் காக்க
கஜமுகன் தம்பி என் கண்ணினைக் காக்க
நாரணன் பாலன் நாசியைக் காக்க

இருமூர்த்தி மைந்தன் என் இருசெவி காக்க
வாபரின் தோழன் வாயினைக்காக்க
பம்பையின் பாலன் பற்களை காக்க
நான்முக பூஜ்யன் நாவினைக் காக்க

கலியுக வரதன் என் கழுத்தினைக்க காக்க
குமரன் தம்பி என் குரள்களை காக்க
புஸ்களை நாதன் புஜங்களை காக்க
முக்கண்ணன் பாலன் முழங்கையை காக்க

கயிலை மைந்தன் கைகளை காக்க
வீரமணிகண்டன் விரல்களைக் காக்க
மணிகண்டதேவன் மார்பினைக் காக்க
வன்புலி வாகனன் வயிற்றினைக் காக்க

முழுமுதற் கடவுள் என் முதுகினைக் காக்க
இமுடிப்பிரியன் என் இடுப்பினைக் காக்க
பிரம்பாயுதன் என் பிட்டங்கள் காக்க
தர்ம சாஸ்தா துடைதனைக் காக்க

முருகன் சோதரன் முழுங்கால் காக்க
கற்பூர ஜோதி என் கணைக்கால் காக்க
பந்தன பாலன் பாதத்தினைக் காக்க
விஜய குமாரன் விரல்களைக் காக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னதானப் பிரபு அங்கமெல்லாம் காக்க
ஆரியங்கா ஜோதி அன்புடன் காக்க
காட்டாளரூபி காலையில் காக்க
நவக்ரஹநாதன் நடுப்பகல் காக்க

மாலின் மகனார் மாலையில் காக்க
அரிஹர சுதனார் அந்தியில் காக்க
இன்பமய ஜோதி இரவினில் காக்க
எரிமேலி சாஸ்தா என்றுமே காக்க

அரியின் மகனார் அனுதினம் காக்க
நடராஜன் பாலன் நாள்தோறும் காக்க
வாசவன் செல்வன் வலப்புறம் காக்க
இருமுடிஈசன் இடப்புறம் காக்க

காக்க காக்க கருணையால் காக்க
பார்க்க பார்க்க என்பாவம் பொடிபட
அம்மையும் மறுமையும் இல்லாதொழிந்திட
ஈசன் மகன் எனை என்றுமே காக்க

கொடிய விஷங்களும் கொள்ளை நோய்களும்
குருதியை குடிக்கும் துஷ்டப் பேய்களும்
காந்தமலைதனை கருத்தில் கொண்டிட
கலங்கி மறைந்திட கருணை புரிவாய்

பில்லி சூனியம் பலவித வஞ்சனை
பம்பையின் பாலன் பெயர் சொல்லிவிடவும்
பஞ்சாய் பறக்க வரமெனக் கருள்வாய்
பயங்களை போக்கி அபயம் அளிபாய்

வாதம் பித்தம் சிலேட்சுமத்துடனே
வாந்தியும் பேதியும் வலிப்பும் சுளுக்கும்
எவ்வித நோயும் எனையணு காமல்
என்றுமே காப்பாய் எரிமேலி தேவா

கல்வியும் செல்வமும் கள்ளமில்லா மனமும்
நல்லோர் உறவும் நாளும் அருள்வாய்
நல்ல மனதுடன் உனை நான் துதிக்க
நித்தமும் அருள்வாய் சபரீ கிரீசா

காமம் குரோதம் லோபம் மோஹாம்
மதமாச் சர்யமெனும் ஐம்பெரும் பேய்களும்
என்றுமே என்னை அணுகி விடாமல்
ஐயப்ப தேவா வரமெனக் கருள்வாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூது, பொறமை, பொய், கோபமில்லாமல்
சோரம், லோபம், துன்மார்க்கம் கல்லாமல்
வேத நெறிதனை விலகி நில்லாமல்
வீரமணிக்ணடா வரமெனக் கருள்வாய்

மூப்பும் பிணியும் வறுமையும் பசியும்
வந்தெனை வாட்டி வதைசெய்யாமல்
உள்ளன்புடனே உன் திருநாமம்
அனுதினம் சொல்ல அருள் தருவாயோ.

## நமஸ்ஹாரம்

அரிஹர புத்ரா அன்பா நமோ நமோ
சபரிகிரீசா சாஸ்தா நமோ நமோ
பதிணெண் படிவாழ் பரமா நமோ நமோ
ஐங்கரன் சோதரா ஐயப்பா நமோ நமோ

பொன்னம் பலத்துறை புண்யா நமோ நமோ
புலிப்பால் ஈந்த புண்யா நமோ நமோ
சுரிகா யுதமுடைச் சுந்தரா நமோ நமோ
மஹிஷி மர்த்தனா மணிகண்டா நமோ நமோ

சரணம் சரணம் சபரிகிரீசா
சரணம் சரணம் சத்ய ஸ்வரூபா
சரணம் சரணம் சர்வ தயாளா
சரணம் சரணம் ஸ்வாமியே சரணம்

## விநாயகர் காயத்ரி மந்திரம்

ஓம் ஏக தந்தாய் வித்மஹோ
வக்ர துண்டாய தீமஹி
தந்தோ தந்தி: பிரசோதயாத்

## ஐயப்பன் காயத்ரி மந்திரம்

ஓம் ஸ்ரீ பூத நாதாய வித்மஹோ
பவ நந்தனாய தீமஹி
தந்தோ சாஸ்தா பிரசோதயாத்

சுவாமியே சரணம் ஐயப்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயப்பன் மூலமந்திரம்

ஓம் ஸ்ரீ அரிஹர புத்ராய
புத்ரலாபாய மஹா சாஸ்த்ரே
சத்ரு நாசநாய மதகஜ
வாகனாய பிரதிஷ்ட சூலாய
வரவரத ஸர்வ ஜனமே
வசமான்ய ஸ்வாஹா

# ஸ்ரீ தர்ம சாஸ்தா அஸ்டோத்திர சகஸ்ரநாமம்

| | |
|---|---|
| ஓம் மஹா சாஸ்த்ரே | நம: |
| ஓம் மஹா தேவாய | நம: |
| ஓம் மஹா வேதஸீதாய | நம: |
| ஓம் அவ்யாயா | நம: |
| ஓம் லோக கர்த்ரே | நம: |
| ஓம் லோக பர்த்ரே | நம: |
| ஓம் லோக ஹர்த்ரே | நம: |
| ஓம் பராத் பராய | நம: |
| ஓம் த்ரிலாக ரக்ஷகாய | நம: |
| ஓம் தன்வினே | நம: |
| ஓம் தபஸ்வினே | நம: |
| ஓம் பூத ஸைனிகாய | நம: |
| ஓம் மந்த்ரவேதினே | நம: |
| ஓம் மஹோவேதினே | நம: |
| ஓம் மாருதாய | நம: |
| ஓம் ஜயதீச்வராய | நம: |
| ஓம் லோகாத்யக்ஷாய | நம: |
| ஓம் அக்ரண்யே | நம: |
| ஓம் ஸ்ரீமதே | நம: |
| ஓம் அப்ரமேய பராக்ரமாய | நம: |
| ஓம் ஸிமஹாரூடாய | நம: |
| ஓம் கஜாரூடாய | நம: |
| ஓம் ஹயாரூடாய | நம: |
| ஓம் மஹேச்சராய | நம: |
| ஓம் நாநாசஸ்த்ராதாய | நம: |
| ஓம் அநர்க்காய | நம: |
| ஓம் நா நா வித்யா விசாரதாய | நம: |
| ஓம் நா நா ரூப தாரய | நம: |
| ஓம் வீராய | நம: |
| ஓம் நாநாப்ராணி நிஷேவகாய | நம: |
| ஓம் பூஜேசாய | நம: |
| ஓம் பூஜிதாய | நம: |
| ஓம் ப்ருத்தாய | நம: |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் புஸங்கபரனோத்தமாய நம:
ஓம் இஷிதன்வினே நம:
ஓம் புஜ்ப பாணாய நம:
ஓம் மஹா ரூபாய நம:
ஓம் மஹாப்பரவே நம:
ஓம் மாயதேவீஸீதாய நம:
ஓம் மான்யாய நம:
ஓம் மஹா குணாய நம:
ஓம் மஹா சைவாய நம:
ஓம் மஹா ருத்ராய நம:
ஓம் வைஷ்ண வாய நம:
ஓம் விஷ்ணு பூஜகாய நம:
ஓம் விக்னேசாய நம:
ஓம் வீரபத்ரே சாய நம:
ஓம் பைரவாய நம:
ஓம் ஷண்முகத்ரு வாய நம:
ஓம் மேருச்ருங்க ஸமாஸனீனாய நம:
ஓம் முனிஸங்கநிஷேவிதாய நம:
ஓம் தேவாய நம:
ஓம் பத்ராய நம:
ஓம் ஜகந்நாதயா நம:
ஓம் கணநாதாய நம:
ஓம் கணேச்வராய நம:
ஓம் மஹா யோகினே நம:
ஓம் மஹா மாயினே நம:
ஓம் மஹா ஞானினே நம:
ஓம் மஹா ஸ்திராய நம:
ஓம் தேவ சாஸ்த்ரே நம:
ஓம் பூத சாஸ்த்ரே நம:
ஓம் பீமஹாஸ பராக்ரமய நம:
ஓம் நாக ஹாராய நம:
ஓம் நாக கேசாய நம:
ஓம் வ்யோம கேசாய நம:
ஓம் ஸசாதனாய நம:
ஓம் ஸீகணாய நம:
ஓம் நிர்குணாய நம:
ஓம் நித்யாய நம:
ஓம் நித்ய த்ருப்தாய நம:
ஓம் நிராச் ரயாய நம:
ஓம் லோகாச் ராயாய நம:
ஓம் கணாதீசாய நம:
ஓம் சது: ஷஷ்டி கலாதயாய நம:
ஓம் ரிக்யஜுஸ்ஸாமாதர்வண ரூபணேநம:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் மல்லகா ஸுபரஞ்ஜணாய நம:
ஓம் த்ரிமூர்த்தயே நம:
ஓம் தைத்தய மானாய் நம:
ஓம் ப்ரபருதயே நம:
ஓம் புருஷேத்தமாய நம:
ஓம் கால ஞானினே நம:
ஓம் மஹா ஞானினே நம:
ஓம் காமதாய நம:
